


# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்

1879-1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 11, இதழ் - 2   மார்ச் - ஏப்ரல் 2025




R4820

## YOUR REASONABLE SERVICE
## உங்கள் புத்தியுள்ள ஆராதனை

“நியாயஞ்செய்து, இரக்கத்தை சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்?” மீகா 6:8

இந்த தேவைகளைக் குறித்து யார் குற்றம் காணக்கூடும்? சர்வ வல்லவர், புது சிருஷ்டிக்காக வைத்திருக்கிற இப்படிப்பட்ட எதிர்பார்ப்பு அதிகமானது என்று யார் சொல்லக்கூடும்? மறுபுறம், இங்கே கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனையைக் காட்டிலும் குறைவாக, நீதியும் அன்பும் நிறைந்த பரலோக பிதாவானவர் எதிர்பார்க்க வேண்டும் என்று எப்படி நாம் கற்பனை செய்யக்கூடும்? பலவிதமாக சொல்லப்பட்டபடி தேவனுடைய பிரமாணம் எப்பொழுதும் இதையே குறிப்பிடுகிறது. சீனாய் மலையில் யூதருக்கு கொடுக்கப்பட்ட பத்து கட்டளைகளுக்கும் இது ஒத்திருக்கிறது. அதே போல மாபெரும் போதகர், “உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு பலத்தோடும், உன் முழு சிந்தையோடும் அன்பு கூர்ந்து, உன்னிடத்தில் அன்பு கூருவது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக” என்று கூறியதற்கும் ஒத்திருக்கிறது.

நம்மில் அநேகர், பரிசுத்த பவுலுடன் தெய்வீக பிரமாணம் பரிசுத்தமானது, நீதியானது மற்றும் நல்லது என்று வாக்களித்தப்பின், அது நமது சிந்தையில் முழு மனதுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் நம்மால் அதற்கு முழுமையாக கீழ்ப்படிய முடியவில்லை. மூவாயிரத்து ஐந்நூறு வருடங்களாக யூதர்கள் அந்த தெய்வீக பிரமாணத்தை கடைபிடிக்க நித்திய ஜீவனுக்கான வாக்குத்தத்தத்தின் கீழாக அப்படிச் செய்ய நாடினாலும் அவர்களில் யாராலும் பரிசை பெறமுடியவில்லை. அவர்கள் ஒரு தேசமாக தங்களது இயலாமையை உணர்ந்த பொழுது, சீக்கிரத்தில் அல்ல, இலவசமாக இரட்சகர் மூலமாக, தெய்வீக பிரமாணத்திற்கு அவர்களது மீறுதலுக்காக மன்னிப்பை பெற தயாராயிருப்பார்கள். அதன் பிறகு அவர்களது புதிய உடன்படிக்கைக்கு கீழாக (எரேமியா 31:31; எபிரேயர் 8: 8-13) மனம், சரீரம் மற்றும் ஒரு புது இருதயத்தின் பரிபூரணத்தை திரும்ப பெறுவதில் மேசியாவின் உதவியை பெறுவார்கள். அது தெய்வீக சட்டத்தின் எல்லா அம்சங்களுக்கு அவர்கள் கீழ்ப்படியும் சாத்தியத்தை ஏற்படுத்தும். தெய்வீக சட்டம் நீதியானது, உண்மையானது என்று நமது மனம் அங்கீகரித்தாலும் நமது பரம்பரையான பலவீனத்தினால் மாம்சத்தில் பூரணமாக அதற்கு கீழ்ப்படிய முடியவில்லை.

மேசியாவின் ராஜ்யம் மற்றும் புது உடன்படிக்கையின் கீழ் சுபாவ இஸ்ரயேலர்கள் சீக்கிரத்தில் பெறப்போகிற ஆசீர்வாதம், ஆபிரகாமின் மாம்சீக சந்ததியாகிய அவர்கள் மூலமாக சகல ஜாதிகள், கோத்திரங்கள் மற்றும் பாஷைக்காரருக்கும் விரிவுபடுத்தப்படும்.

அதற்கு முன் கூட்டியே, தற்போது அதற்கு தொடர்பான ஒரு வித்தியாசமான கிருபை, யூதர்களிடமிருந்தும் புற ஜாதிகளிடமிருந்தும் கூட்டிச் சேர்க்கப்பட்ட, “பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சபை” என்று வேதவாக்கியங்களின் மூலம் அறியப்பட்ட ஒரு சிறு வகுப்பாருக்கு அருளப்படுகிறது. இவர்கள் முன்கூட்டியே தெய்வீக பிரமாணத்தை கைக்கொள்ள முடியவில்லை என்பதை உணர்ந்து, இரட்சகரின் புண்ணியத்தின் மேல் விசுவாசத்தை பற்றிக்கொண்டு, அவர் மூலமாக சகலத்தையும் தேவனுக்கு அர்ப்பணம் பண்ணுகிறார்கள். இரட்சகரில் அவர்கள் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். அவர்களது இருதயம் நீதிக்காக முயற்சிப்பது அங்கீகரிக்கப்படுகிறது. அவர்களது மாம்சமும் அதன் அபூரணமும் கைவிடப்பட்டு, மரித்ததாக கருதப்படுகிறது. அவை இரட்சகரின் புண்ணியத்தினால் ஈடுகட்டப்படுகிறது. இவர்கள், மாபெரும் தீர்க்கதரிசி, ஆசாரியர், ராஜா மற்றும் தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரின் அங்கங்களாக வேத வாக்கியங்களினால் வகைப்படுத்தப்படுகிறார்கள். விசுவாசிகள் அனைவரும் மேசியாவின் அங்கங்களாக, “சிறுமந்தையாக” ஆகி, அவருடன் “ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகிய மணவாட்டியாக” அவருடைய உடன்சுதந்தரராக ஆக்கப்படும் பொழுது நமது தலைப்பு வசனத்தின் கருத்து நிறைவேற்றப்படும்.

### நமது தலைப்பை ஆராய்தல்

மேற்கூறியவைகளின் உண்மைத்தன்மையை நாமே நிரூபிக்கலாம். நியாயமாக என்ன செய்யலாம்? நம்முடைய பொருளை வாங்குகிற பிறனிடம் அதிக விலை வாங்கக்கூடாது என்பதைக் காட்டிலும் அதிகமானது; அவனை ஏமாற்றக்கூடாது என்பதை அர்த்தப்படுத்துகிறது. நீதியாக கையாளுதல் என்பது வேலைக்காரனுக்கும் எஜமானனுக்கும், எஜமானிக்கும் வேலைக்காரிக்கும், வாங்குகிறவருக்கும் விற்கிறவருக்கும் இடையேயான நீதியாகும். மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறோமோ

அதை பிறருக்கு நாம் செய்வதாகும். அதாவது மாபெரும் போதகர் விதித்த பொன்னான பிரமாணத்தை கண்டிப்பாக பின்பற்றுவதை அர்த்தப்படுகிறது.

இந்த நீதியின் கோட்பாட்டை நமது வார்த்தையில் அப்பியாசப்படுத்த வேண்டும். அதாவது நண்பனைக் குறித்தோ அல்லது விரோதியைக் குறித்தோ நாம் தீமை பேசக்கூடாது; நாம் தீமையை மறைமுகமாக கூட பேசக்கூடாது என்று பொருள்படுகிறது. மற்றவர்களுக்கு தீங்காக இருந்தால், மற்றவர்களின் கண்களுக்கு அவமானமாகவோ அவமதிப்பாகவோ காணப்படுமானால் நாம் உண்மை என்று அறிந்தாலும் தேவையில்லாமல் சொல்லக்கூடாது என்று அர்த்தப்படுத்துகிறது. நாம் தன்னைத்தான் நேசிப்பது போல பிறனையும் நேசிக்க வேண்டும்; நம்முடையதைப் போல மற்றவர்களையும் அவர்களது நலன்களையும் பாதுகாக்க வேண்டும் என்பதையும் அர்த்தப்படுத்துகிறது.

நீதியானது நமது வார்த்தையிலும் கிரியையிலும் செயல்படுத்தப்பட நமது இருதயங்களிலும், சிந்தைகளிலும் செயல்படுத்தப்பட வேண்டும். "அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்." அவன் அன்பில்லாமல், பெருந்தன்மையில்லாமல் அநீதியாக நினைத்தால், அநீதியை அன்பின்மையை, இரக்கமின்மையை தனது வார்த்தைகளிலும் கிரியைகளிலும் தவிர்க்கவே இயலாது. "இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்." நீதியை செய்வது என்பது சிந்தையிலும் வார்த்தையிலும், நடத்தையிலும் பூரண நீதியை குறிக்கிறது. இதில் நாம் அனைவரும் திறனற்றவர்கள். இதற்கு அருகில் நெருங்குதல் என்பது உடன்படிக்கையினால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சீஷர்களாக ஆனவர்களின் நீதியான அல்லது பூரணமான இருதய நோக்கமாக இருக்கிறது. இவர்களது நோக்கமும் நல்ல முயற்சியும் பிதாவுக்கு பிரியமாயிருக்கிறது. உலகத்தைப் பொறுத்தவரை அவர்களது மாம்சீக அபூரணம் மற்றும் பலவீனத்திலிருந்து உயர்த்தி பொன்னான பிரமாணத்திற்கு முழு இசைவாக அவர்களது எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் செய்கைகளை கொண்டு வருவதற்கு உதவி நீண்ட காலங்கள் தேவைப்படுகிறது. அவர்கள் இதை அடைவது என்பது, அனைத்து மாம்சீக பலவீனங்களிலுமிருந்து விடுபடுவது மற்றும், மறு சீரமைப்பு மூலமாக ஆதாமில் இழந்த, தேவனுடைய சாயலையும் ரூபத்தையும் திரும்ப பெறுதல் என்று பொருள்படும்.

## கருணையை நேசித்தல்

கருணை என்பது ஒரு சரியான, மிகவும் விரும்பத்தக்க குணம் என்று எல்லோரும் அங்கீகரிக்கிறார்கள். தெய்வீக கருணையின் அவசியத்தை அனைவரும் உணருகின்றனர். மற்றவர்களிடம் கருணை காண்பிப்பவர்கள் மட்டுமே கர்த்தரிடமிருந்து கருணையை பெறுவார்கள் என்பதை அனைவரும் அறிய வேண்டும். எனினும் அநேகர் இவை அனைத்தையும் ஏற்றுக்கொண்டு, கருணையை அப்பியாசப்படுத்த நாடும் போது கருணையை நேசிப்பதில்லை. மாறாக, அவர்கள் பழிவாங்குதலை நேசிக்கிறார்கள். அவர்கள் தேசத்தின் சட்டங்களினாலும், பொதுமக்களின் மனோபாவத்தினாலும் மற்றும் தேவனுடைய வசனத்தினாலுமே கட்டுப்படுத்தப்படுகிறார்கள். கொலைகள் போன்ற காரியங்களினால் இது காண்பிக்கப்படுகிறது. நீதியையும் கருணையையும் ஒதுக்கி வைத்துவிட்டு தண்டனை கொடுப்பதற்காக கும்பல் கூடி சந்தர்ப்பம் கிடைத்ததற்காக சந்தோஷம் அடைகிறார்கள். தண்டிக்கப்பட்ட அந்த மனுஷனைப் போல கும்பலில் இருந்த அநேகரும் பெரும் குற்றங்களை செய்தவர்களாக இருப்பார்கள். "நீ சம்பத்தாயிருக்கிறாய்."

## உன் தேவனுக்கு முன்பாக பணிவாக நடவுங்கள்

நமது விழுந்துபோன சுபாவத்தின் வினோதமான புத்தியினால் முதல் இரண்டு தேவைகளை பின்பற்ற விருப்பமும் மிகுந்த திறமையும் உடையவர்கள் இந்த மூன்றாவது தேவையில் தகுந்த குற்றவாளிகளாக இருக்கிறார்கள். நீதியும் கருணையும் உடையவர்கள் ஆவிக்குரிய பெருமையும் உயர்வு மனப்பான்மையும், உடையவர்களாயிருப்பதை காண்கிறார்கள். அது அவர்கள் தேவனிடம் பணிவாக நடப்பதற்கு ஒரு தடையாக இருக்கிறது. சர்வ வல்லவரிடம் மிகவும் பணிவாக இருக்கிறவர்கள் பெரிய பாவங்களையும் பலவீனங்களையும் உடையவர்களாக இருந்திருக்கிறார்கள். அவைகள் அவர்கள் பணிவதற்கு உதவியிருக்கிறது. இப்படியாக மகா அப்போஸ்தலர் பரிசுத்த பவுல் பார்வைக் குறைவு உடையவராக இருக்கும்படி அவரது மீதமுள்ள காலங்களில் அனுமதிக்கப்பட்டார். அவர் "கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை" துன்பப்படுத்துகிறவராக இருந்த போது, தமஸ்குவுக்கு போகும் வழியில் தேவனுடைய கிருபை எப்படி அவரை பற்றிக்கொண்டது. தேவனுடைய தயவு இல்லாதிருந்தால் அவர் நம்பிக்கையற்றவராக தொடர்ந்து குருடனாகவே இருந்திருப்பார்.

அப்போஸ்தலர் தனது கண்ணில் இருந்த பலவீனத்தை மாம்சத்தில் கொடுக்கப்பட்ட ஒரு முள் என்றும் அது தன்னை குட்டும் சாத்தானுடைய தூதன் என்றும் கூறுகிறார். இந்த துன்பத்தை நீக்க தேவன் மறுத்துவிட்டார். ஏனெனில் தேவன் அவருக்காக வைத்திருக்கிற மாபெரும் வேலையை பெருமை இல்லாமல் மிகவும் தாழ்மையுடன் செய்ய அந்த முள் அவரைக் குட்டும். தெய்வீக செய்தியாவது: "எனது கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்." இந்த கருத்தை உணர்ந்து அப்போஸ்தலர் கூறியதாவது: "ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என் மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்."

ஆகையால் அனைத்து தேவனுடைய ஜனங்களும் இந்த தெய்வீக தேவைக்கேற்ப நமது திராணியை உணர்ந்து, தேவனுடைய கிருபை போதும் என்று களிகூறலாம். அங்கே அவர்களது பலவீனம் உணரப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்டு, வெறுக்கப்பட்டு, அவரது இரக்கம் உணரப்பட்டு, நாடி ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

R4822

# LOOSING THE FOUR WINDS OF HEAVEN
# வானத்தின் நான்கு காற்றுகளை அவிழ்த்துவிடுதல்

முந்தைய வருகையைக் காட்டிலும் நமது சமீபத்திய ஐரோப்பிய வருகை மக்களிடையே இனி அமைதியின்மை இல்லை என்பதை வெளிப்படுத்துகிறது. எல்லா இடங்களிலும் செழுமைக்கான அநேக ரூபகாரங்களை கண்டு உண்மையிலேயே நாங்கள் ஆச்சரியப்பட்டோம். சில வன்முறை மட்டுமே இருந்தன. இந்த கருத்தை சிலர் உறுதிப்படுத்தினர். ஆனால் ஆழமான அதிருப்தி இருந்தது. ஆனால் அது வெளியில் தெரியவில்லை என்பது மற்றவரின் கருத்தாக இருந்தது. இன்னும் சில வருடங்களில் இந்த யுகம் மோசமாக ஆபத்தின் காலத்துடன் முடிவடையப் போகிறது என்பது நமது வாசகர்களுக்குத் தெரியும். இது அக்டோபர் 1914க்கு முன்னரே திடீரென்று வரும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். நாம் இதுவரை வேதவாக்கியங்களை புரிந்து கொண்டபடி, புறஜாதியாரின் காலம், புறஜாதியாருக்கு பூமியின் ஆளுகையை குத்தகைக்கு கொடுத்த காலம் முடிவடையும். ஆகையால் அந்த காலமே மேசியாவின் ராஜ்யம் தனது அதிகாரத்தை உபயோகிக்கக்கூடிய காலமாக இருக்கும்; தேசங்களை அது குயக்கலத்தைப் போல உடைத்துப் போடும் என்று வேதவாக்கியங்கள் அறிவிக்கின்றன. அந்த சமயத்தில் சபையானது முழுமையடைந்து, இரண்டாம் திரையைக் கடந்து "மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள்" நுழைந்திருக்கும்; முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெற்று பரிபூரண ஆவிக்குரிய சுபாவத்தைப் பெற்றிருக்கும். நாம் இதுவரை அறிவித்தது போல, எப்படி சபை வகுப்பார் அனைவரும், அந்த தேதிக்கு முன் மரித்து, "ஒரு இமைப்பொழுதிலே" மறுரூபமடைவார்கள் என்பது நமக்கு தெளிவாக இல்லை.

இந்த குழப்பங்களை நாம் கவனிக்கும் போது, வேதாகம காலக்கணக்கின் அம்சங்களில் எந்த தவறையும் காணமுடியவில்லை என்பதையும் கவனிக்கும் போது, நமது சிந்தை, புதிய முக்கியத்துவத்தை உடையதாக காணப்படுகிற இன்னொரு பழைய வேதவாக்கியத்துக்கு அனுப்பப்படுகிறது. அந்த வசனமாவது: "பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின் மேலாவது, சமுத்திரத்தின் மேலாவது, ஒரு மரத்தின் மேலாவது, காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்க கண்டேன்...... நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைப் போட்டு தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள்." (வெளிப்படுத்தல் 7:1-3)

இந்த அடையாளமான காற்றுகள் சண்டை, அராஜகம், மகா ஆபத்துக் காலம் என்பதை குறிக்கும் என்பதை நாம் நீண்ட நாட்களாக பார்க்கிறோம். தற்கால சத்தியத்தின் மூலமாக தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பாரின் ஜீவனோடிருக்கும் அங்கங்களை முத்திரைப் போடும் வரை, அறுவடை வேலை முடியும் வரை தெய்வீக வல்லமையால் அது நடைபெறும். இந்த நான்கு காற்றுகளும் அவிழ்த்து விடப்பட்டு, சேர்ந்து வந்து ஒரு சுழல்காற்றை ஏற்படுத்தும். அது வரவிருக்கிற மகா ஆபத்தின் காலத்தை குறிக்க வேதகாமத்தில் அடையாளமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அடையாளமாக சொல்லப்பட்டிருக்கிற இந்த சுழல் காற்றில் சபைக்கு முன்னடையாளமான எலியா எடுத்துக்கொள்ளப்பட்டதற்கு ஒத்திருக்கிறது. காற்றுகள் தப்பறையான போதகங்களையும் குறிப்பிடுகிறது. (எபேசியர் 4:14)

### "ஆகாயத்து அதிகாரப்பிரபு"

மேற்கூறியவைகளுக்கு எதிராக இனி பார்க்காமல், அதை உறுதிப்படுத்தும்படியாக ஒரு வெளிச்சத்தை தரப்போகிறோம். இந்த காற்று அல்லது ஆகாயத்து அதிகாரங்கள், அடைத்து வைக்கப்பட்ட விழுந்து போன தூதர்களை குறிக்கிறது. இவர்களது பிரபு, "ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய" சாத்தான். தெய்வீக சக்தி கட்டுப்படுத்தியிருக்காவிட்டால் நீண்ட காலத்துக்கு முன்பு அடையாளமான பூமி, சமுத்திரம் மற்றும் மரங்களை கெட்ட தூதர்கள் சேதப்படுத்தியிருப்பார்கள் என்பது எங்கள் கருத்து. பூமியானது அடையாளமாக ஒழுங்கமைக்கப்பட்ட சமூகத்தைக் குறிக்கிறது. கடல் என்பது ஒழுங்கற்ற வெகு ஜனங்களையும் மரங்கள் விசுவாச வீட்டாரையும் குறிக்கிறது. விழுந்து போன தூதர்களை திடீரென்று அவிழ்த்து விடுதல் என்பது வரக்கூடிய ஆபத்து திடீரென்று வருவதைக் குறிக்கிறது. இது வேதத்தில் அநேக இடங்களில், இதே போல, "ஒரு மணி நேரத்தில்," "கர்ப்பவதியானவருக்கு வேதனை சடுதியாய்," "நோவாவின் நாட்களில் நடந்தது போல," "லோத்தின் நாட்களில் நடந்தது" போல என்று வேத வாக்கியங்களில் காண்கிறோம்.

மறுபடியும் நாம் நோவாவின் நாட்களிலும் லோத்தின் நாட்களிலும் அழிவு சடுதியாய் வந்ததில் மாத்திரம் ஒத்து இராமல் அந்த காலத்தின் வன்முறை மற்றும் விபச்சாரங்களுக்கும் ஒத்திருக்கிறது. இதற்கு முன் இல்லாத அளவுக்கு மனிதரின் தவறான அபிப்பிராயமும் வேட்கையும் உஷ்ணத்தை வெளிப்படுத்துகிறது. சமூகத்தைக் கட்டுப்படுத்த ராணுவம் மற்றும் போலீஸ் ஒழுங்கு முறையினால் இயலாதிருக்கிறது. அதிருப்தி, சுயநலம், வேட்கை, வெறி முதலானவை தற்கால நிலைமையில் மனுக்குலத்தை வசீகரிக்கக்கூடும். "ஆகாயத்து அதிகாரங்கள்" கொஞ்ச கால சுதந்தரத்தை அனுபவிக்க அனுமதிக்கப்படும் போது இருதயங்களில் தீய போக்கை வெளிப்படுத்தும். ஏனெனில் சுதந்தரம் உண்மையான சந்தோஷத்தை கொண்டு வராது என்பதை விளக்கவேயாகும். தெய்வீக தேவைக்கு முழு இசைவு இருந்தால் மட்டுமே உண்மையான சந்தோஷத்தைக் கொண்டு வரும்.

R4823

## "THE CHURCH OF THE FIRST BORNS"
## "முதற்பேறானவர்களின் சபை"

"முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபை." (எபிரேயர் 12:22,23)

"முதற்பேறானவர்களின் சபை" என்பதை முதலாம் உயிர்த்தெழுதலின் சபையோடு குழப்பிக் கொள்ளக்கூடாது. முதலாம் உயிர்த்தெழுதல் என்ற சொற்றொடரில் முதலாம் என்பது சிறந்த, மேன்மையானதை குறிக்கிறது. முதலாம் உயிர்த்தெழுதல் கர்த்தரையும் "அவரது சரீரமாகிய சபையை" மட்டுமே உள்ளடக்கியது. வேறு வார்த்தையில் சொன்னால் அவர்கள் மணவாட்டி வகுப்பார் ஆகும். ஆனால் இந்த மகிமையான முதற்பேறானவர்களின் சபையில் ஆவியினால் பிறந்த அனைவரும் உள்ளடங்கியிருக்கிறார்கள். ஆவியின் சுபாவத்தைப் பெறப்போகிற இவர்கள், உலகத்திற்கு தேவனுடைய கிருபை போவதற்கு முன்னதாக, சுவிசேஷ யுகம் முழுவதும் அபிவிருத்தி பண்ணப்படுகிறார்கள். இந்த முதற்பேறானவர்களின் சபையில், புது உடன்படிக்கை அமலுக்கு வருவதற்கு முன்னரே, தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் வருகிறவர்கள் அனைவரும் உள்ளடக்கியிருக்கிறார்கள். சிலர் மகா "பிரதான ஆசாரியருடன்" (அந்த சபையின் கீழான பங்கை) புது உடன்படிக்கையை நிறுவுவதில் பங்கு பெறுவார்கள். அவர்கள் புது உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாருக்கும், முதலாவது இஸ்ரயேலருக்கும் பிறகு மற்ற கோத்திரத்தாருக்கும், விநியோகிப்பதில் கொஞ்சம் பங்கை பெறுவார்கள்.

### "நீங்கள் சீயோன் மலையினிடத்திற்கும் பரம எருசலேமினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்"

முதற்பேறானவர்களின் சபை தீர்க்கதரிசனமாக பழைய ஏற்பாட்டில் பஸ்கா தொடர்பாக தீர்க்கதரிசனமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. அந்த ராத்திரியில் எகிப்தின் முதற்பேறானவர்கள் அனைவரும் அழிக்கப்பட்ட பொழுது, இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் அனைவரும் காக்கப்பட்டார்கள். அவர்கள் வீட்டு வாசல்களிலும் மேற்சட்டத்திலும் இரத்தத்தை பூசியதாலும் பஸ்கா ஆட்டில் வீட்டுக்குள்ளே பங்கு பெற்றதாலும் அவர்கள் தப்பித்தார்கள். அதன்பிறகு இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் எல்லாம் லேவி கோத்திரத்தாரால் பரிமாற்றம் செய்யப்பட்டார்கள் என்பதை நாம் அறிவோம். இந்த கோத்திரம் ஆசாரிய வகுப்பார் என்றும் ஊழியக்காரர் வகுப்பார் என்றும் இரண்டாக பிரிக்கப்பட்டதையும் நாம் அறிவோம். இவர்கள் எல்லாரும் லேவியராக இருந்தாலும், முன்னானவர்கள் ஆசாரியர்கள் என்றும் பின்னானவர்கள் லேவியர் என்றும் அழைக்கப்பட்டார்கள். இந்த இரண்டு வகுப்பாரும் சுவிசேஷ யுகத்தின் சபைக்கு அடையாளமாக இருந்தார்கள்.

"ஆனால் நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்." (எபிரேயர் 12:22,23) எதற்காக நாம் வந்து கொண்டிருக்கிறோமோ அதை நெருங்கியிருக்கிறோம் என்பதை இது குறிப்பதாக நாம் சரியானபடி புரிந்து கொள்ளுகிறோம். அது பார்வையில் உள்ளது. சிலர் அதை முன்னரே அடைந்திருக்கிறார்கள். நமது கர்த்தர் இலக்கை அடைந்திருக்கிறார். முதற்பேறானவர்களில் மற்ற சிலரும் கூட இலக்கை அடைந்திருக்கிறார்கள். நம்மில் சிலர் இன்னும அதை அடையவில்லை. ஆனால் இதைத்தான் நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம். நாம் இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில் அதிகாரத்திற்கும் தெய்வீக திட்டத்தில் நமது இடத்திருக்கும் வந்திருப்போம். அதன்பின் "ஆபத்துக் காலம்" வரும். இத்துடன் இந்த யுகம் முடிவுடையும். இதை சீனாய் மலையின் அதிர்வு நிழலாக காண்பிக்கிறது. இதன் தொடர்ச்சியாக நாம் எண்ணற்ற தேவதூதர்களின் கூட்டத்தை நெருங்குகிறாம் என்றும் வாசிக்கிறோம்.

இங்கே அப்போஸ்தலர் எதிர்கால மகிமையை நமக்கு முன் வைப்பதாக தெரிகிறது. நாம் நமது பரம பிதாவையும், பரலோக கர்த்தரையும் பார்த்து முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையும் அறிமுகம் ஆவதோடு மாத்திரமல்ல, எண்ணற்ற தேவதூதர்களின் கூட்டத்தோடும் அறிமுகம் ஆவோம். இந்த தூதர்கள்தான் கர்த்தருக்கு பயந்தவர்களைச் சுற்றி பாளையமிறங்கி விடுவிக்கிறவர்கள். (சங்கீதம் 34:7) இவர்கள் இரட்சிப்பை சுதந்தரிக்கப் போகிறவர்களுக்கு ஊழியம் செய்யும்படி அனுப்பப்படுகிறவர்கள். (எபிரேயர் 1:14) அவர்கள் இங்கே நம்முடன் இருந்து நமக்குரியவைகளை மேற்பார்வையிடுகிறார்கள். ஆவிக்குரிய தளத்தில் அறிமுகமாவது நமக்கு சந்தோஷமாக இருக்கும். இவைகளை அப்போஸ்தலர் சொல்லாமலிருந்தால் இதை நாம் விநோதமாக நினைத்திருப்போம். ஏனெனில் நாம் நெருங்குகிற காரியங்களை அவர் கணக்கிடுகிறார்.

இவ்விதமாக லேவியரில் ஆசாரியர்களின் சிறுகூட்டத்தையும் சேர்க்கிறது போல முதற்பேறானவர்களின் சபையானது "திரள் கூட்டத்தாரையும்" சேர்க்கிறது. லேவியருக்கு தேசத்தில் சுதந்தரம் இல்லாதது போல "சிறு மந்தைக்கு" மட்டுமல்ல ஊழிய வகுப்பும் தோழி வகுப்புமாகிய திரள் கூட்டத்தாருக்கும் பூமிக்குரிய சுதந்தரத்தில் பங்கு இல்லை. ஆனால் பரலோக சுதந்தரத்தில் ஒரு பங்கை பெறுவார்கள்.

R4823

## "SUFFER LITTLE CHILDREN TO COME"
## "சிறுபிள்ளைகள் வருகிறதற்கு இடங்கொடுங்கள்"

பெற்றோர்கள் அநேக சந்தர்ப்பங்களில் அவர்களது குழந்தைகளைப் பற்றியும் தங்களது பிள்ளைகளை எப்படி கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ணுவது என்பது குறித்துக் கர்த்தரிடம் கேட்டார்கள். நாம் குழந்தைகளை ஞானஸ்நானம் கொடுப்பதற்கு நிச்சயமாக மறுக்கிறோம். ஏனெனில் அப்படிப்பட்ட காரியம் தேவனுடைய வசனங்களுக்கு விரோதமாக இருக்கிறது. ஏனெனில் ஞானஸ்நானம் விசவாசிகளுக்கு மட்டுமே கொடுக்கப்பட வேண்டும். அது மரணபரியந்தம் தேவனுடைய ஊழியத்திற்கு அர்ப்பணத்தின் ஒரு வெளியரங்கமான அடையாளமாக இருக்கிறது. விசுவாசத்தினால் இப்படி அர்ப்பணம் செய்வதால், கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் சாயலில் பங்கு பெறுவார்கள்.

எனினும் சாமுயேல் குழந்தை பருவத்திலேயே எப்படி கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டார் என்பதையும், நமது பெற்றோர்கள் எப்படி நம்மை குழந்தை பருவத்திலேயே கர்த்தருடைய ஊழியத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டோம் என்பதையும், அனைத்து யூத சிறுவர்கள் கர்த்தருடைய சித்தத்தின்படி எப்படி பரிசுத்தத்திற்காக பிரித்து வைக்கப்பட்டார்கள் என்பதையும் நாம் நினைவு கூருகிறோம். மேலும் எப்படி பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை ஆசீர்வதிக்கும்படியும் அல்லது ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்கும்படியும் இயேசுவிடம் கொண்டு வந்தார்கள் என்பதையும் நினைவுகூருகிறோம். சீஷர்கள், இது ஆண்டவருக்கு முக்கியமில்லாத வேலை என்று நினைத்து அதைத் தடுத்தார்கள் என்பதையும் நாம் நினைவுகூருகிறோம். அப்பொழுது இயேசு அவர்களை அழைத்துக் கூறியதாவது: "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களை தடை பண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது." (மாற்கு

10:14) இனி புரூக்ளினில் ஞாயிறு மாலை குழந்தைகளை ஆசீர்வதிக்கும் ஆராதனை நடைபெறும் என்று அறிவிப்பு கொடுத்தோம். ஆனால் எந்த வகுப்பும் நாங்கள் வரும் போது பொது கூட்டத்தில் இந்த சந்தர்ப்பத்தை ஏன் பயன்படுத்தவில்லை என்பதற்கு காரணம் என்ன என்று தெரியவில்லை.

இந்த ஆராதனை பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளுக்கு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது எங்களது கருத்து, பெற்றோர்களின் பொறுப்புக்களை இது பதிய வைக்கக்கூடியதாக இருக்கிறது. பொது இடத்தில் பிள்ளைகளை தேவனுக்கு அர்ப்பணிப்பது, பெற்றோர்கள் தங்கள் கடமைகளை செய்வதற்கும் பிள்ளைகள் தாங்கள் தேவனுக்கு அர்ப்பணம் பண்ணப்பட்டிருக்கிறோம் என்கிற அறிவுக்கு வரவும் உதவுகிறது.

எனினும் இதில் பிரமாணம் அல்லது கடமை அல்லது முறைமை இருக்கிறது என்று புரிந்துகொள்ளக்கூடாது. அதை விரும்புகிறவர்களுக்காக மட்டும் இது ஏற்பாடு செய்யப்படுகிறது. இது ஒரு நபரால் மட்டுமே செய்யப்பட வேண்டும் என்பதில்லை. சத்திய ஊழியம் செய்கிற யாரும் பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க பகிரங்கமாக காரியத்தைக் கூறி தெய்வீக ஆசீர்வாதத்தை கேட்கலாம்.

**R4826**

## RIGHT HABITS OF THOUGHT
## சரியான சிந்தனை பழக்கம்

"கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்." பிலிப்பியர் 4:8

இங்கே அப்போஸ்தலர் பவுல் கர்த்தரின் வாயாக இருந்து சபையானது எப்படி தன்னை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று இங்கே அறிவுறுத்துகிறார். சரீரத்தின் மேல் மனதின் பெரிய செல்வாக்கை குறிப்பிட்டு சிந்திப்பதற்கு சில குறிப்பிட்ட விதிகளை வைக்கிறார். ஏனெனில் மனிதன் நினைக்கிற மாதிரியே அவன் ஆகிறான். நல்லவைகளை அதிகமாக சிந்திக்கும் போது, நல்லவனாக இருப்பான். தீயவைகளை அதிகமாக சிந்திக்கும் போது, அவன் தீயவனாகிறான். நாம் நினைக்கிற காரியங்களை கனத்துக்குரியதாக, நீதியானதாக, புகழுக்குரியதாக, அழகானதாக இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இந்த குணலட்சணங்கள் இல்லாத எதையும், கர்த்தருடைய ஜனங்கள் நினைக்கவே கூடாது. ஆச்சரியமான குணலட்சண மாற்றம், இந்த காரியங்களைக் குறித்து நினைக்கிறதாலேயே கிடைக்கிறது. இவைகள் ஞானத்தையும் ஆழமான அறிவுறுத்தலையும் பெற்றிருக்கின்றன. இவைகள் தேவனைத் தவிர வேறு யாரிடமிருந்தும் வருவதில்லை.

### "சத்திய ஆவி வரும் பொழுது அது உங்களை சகல சத்தியத்துக்குள்ளும் நடத்தும்"

பரிசுத்த பவுல் கர்த்தரை அவர் பரலோகம் சென்ற பிறகு பார்க்கும் சலுகையை பெற்றவராயிருந்தார். அவரும் மற்ற அனைத்து அப்போஸ்தலர்களும் ஆண்டவரின் வார்த்தைகளால் நிறைந்திருந்தனர். "பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளை கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்." (மத்தேயு 18:18) அதாவது அப்போஸ்தலர்கள் தெய்வீக ஞானத்தினால் வழி நடத்தப்பட்டு, வாழ்க்கைக்கு தேவையானது என்று சொல்லுகிற அனைத்தும் பரலோகத்தில் அங்கீகரிக்கப்படும்; வாழ்க்கைக்கு தேவையற்றது என்று அறிவிக்கிறவைகள் பரலோகத்தில் அங்கீகரிக்கப்படும். எனவே சபையின் கடமைகளும் பொறுப்புகளும் இந்த அப்போஸ்தலர்களால் வரையரை செய்யப்பட்டன. பழைய ஏற்பாட்டில் நாம் பார்க்கிற வேத வாக்கியங்கள் எல்லாம் நமக்கு முக்கியமானதாக இருக்கின்றன. நமது கர்த்தர் அப்போஸ்தலர் மூலமாக குறிப்பிட்டிருக்கிறார்.

நமது கர்த்தர் பேசிய அநேக வார்த்தைகள் கருகலானதாக இருக்கின்றன. அவர் இந்த சில கருகலான வார்த்தைகளின் விளக்கங்களை பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல் மூலம் அப்போஸ்தலரிடம் விட்டிருக்கிறார். சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாமலும் இவைகளை புரிந்து கொள்ள முடியாமலும் இருந்ததே ஆழமான மற்றும் ஆவிக்குரிய காரியங்களை இயேசு விளக்காமல் இருந்ததற்கான காரணமாக இருக்கிறது. அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட பிறகு தேவனுடைய வசனத்தின் ஆழமான காரியங்களை புரிந்து கொள்ளக்கூடியவர்களாக இருந்தார்கள்.

நமது கர்த்தர் கூறியதாவது: "சத்திய ஆவி வரும் போது, அவர் உங்களை சகல சத்தியத்துக்குள்ளும் வழிநடத்துவார்... வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்." (யோவான் 16:13) இதை அவர் அப்போஸ்தலர்களின் எழுத்துக்களாலும் விசுவாசிகள் மூலமாகவும் சுவிசேஷ யுகம் முழுவதும் செய்திருக்கிறார். இப்படியாக நமது கர்த்தர் மகிமையான நமது நம்பிக்கைகளை நிறைவு செய்து கொண்டிருக்கிறார்; இப்படியாக மணவாட்டி ஆட்டுக்குட்டியானவரின் திருமணத்திற்காக தயாராகிக் கொண்டிருக்கிறாள். அது சீக்கிரத்தில் நடைபெறும்.

"எல்லா காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள். அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்." (நீதிமொழிகள் 4:23) இவைகள், ஞானி சாலொமோன் ராஜாவின் உணர்வுள்ள வார்த்தைகள்! மனதில் இதே சிந்தனையிலேயே அப்போஸ்தலர்கள் நமது தலைப்பு வசனத்தின் வார்த்தைகளை எழுதினார்கள். இது எவ்வளவு அழகாக இருக்கிறது! இது பிலிப்பு சபையாருக்கு கொடுக்கப்பட்ட கடைசி அறிவுரையாக இருக்கிறது. அவர்களை "சந்தோஷமும், கிரீடமுமானவர்களே" என்று வாஞ்சையுடன் அழைக்கிறார். இருதயத்திலிருந்து ஜீவ ஊற்று புறப்படக் கூடிய அளவுக்கு சிந்தையை வைத்திருப்பது எப்படிப்பட்டது!

இருதயம் சித்தத்தையும், நோக்கத்தையும் குறிக்கிறது. சித்தமானது உண்மையாகவும் தேவனை மையப்படுத்தியும் வைக்கப்பட வேண்டும். ஆனால் அது முழு மனிதனையும் கட்டுப்படுத்தக்கூடிய சக்தியாக இருக்கிறது. சித்தமானது முழு மனிதனையும் கட்டுப்படுத்தக்கூடியதாக இருந்தாலும் செல்வாக்குகளுக்கு கீழ்ப்பட்டதாகவும் இருக்கிறது. எண்ணங்கள் தூய்மையற்றதாகவும், நீதியற்றதாக அல்லது பரிசுத்தமற்றதாக இருந்தால் சித்தத்தின் சக்தி மென்மேலும் பலவீனமானதாக ஆகும். அப்போஸ்தலருடைய ஞானமான அறிவுரையானது நமது சிந்தனையின் குணலட்சணம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதாகும். கர்த்தருக்கு பயப்படுவதில் பூரண பரிசுத்தத்திற்கு பாடுபடுகிறவர்களில் பரிசுத்த அழகினால் தங்களை அலங்கரித்துக்கொள்ள

பாடுபடுகிறவர்களில் எண்ணங்கள் அலட்சியம் பண்ணப்படவும் அலைபாயவும் அனுமதிக்கக்கூடாது. ஆனால் அப்போஸ்தலர் கூறுவது போல சுத்தமான ஆரோக்கியமான உணவு கொடுக்கப்பட ஒழுங்குப்படுத்தப்பட வேண்டும்.

**ஒரு காரியத்தின் உண்மை சோதனைகளில் ஒன்றாகும்**

இது உண்மையா அல்லது தவறா? எந்த காரியத்தைக் குறித்தும் முதல் கேள்வி இதுதான். சத்தியத்தின் மீதான அன்பு நீதியான வாழ்க்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது. வஞ்சம் அல்லது மிகைப்படுத்துதலில் ஒத்த உணர்வுள்ளவர்கள் ஏறக்குறைய தங்களையே மாசுபடுத்திக் கொள்ளுகிறார்கள். ஆனால் தங்கள் சிந்தைகளை தூய்மைப்படுத்திக் கொள்ளுகிறவர்கள் அந்த அளவுக்கு தங்களது குணலட்சணம் முழுவதையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறார்கள். நமது எளிய மற்றும் அபூரண மூளையினிமித்தம் நாம் தவறாக வழி நடத்தப்படும் பெரிய ஆபத்து இருக்கிறது. ஆகையால் சத்தியம் இல்லாத எதையும் தொட வேண்டாம் என்று தேவனுடைய வசனம் நமக்கு மிகவும் ஆர்வத்துடன் புத்தி கூறுகிறது.

சத்தியம் என்பது, ஒவ்வொரு காரியத்தையும் சோதித்து பார்க்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது. நமது சிந்தனைகளில் அநேக காரியங்கள் உண்மையுள்ளவைகளாகவும், எனினும் மதிப்பற்றவைகளாகவும், தகுதியற்றவைகளாகவும் இருக்கின்றன என்பது யாருக்குத் தெரியாது. நமது எண்ணத்தில் தோன்றுகிற உண்மையான, ஆனால் மதிப்பற்ற மற்றும் தகுதியுள்ள காரியங்கள் பெரும்பாலும் நமது பலவீனம், பிழைகள் மற்றும் அறிவீனம் ஆகியவற்றிற்கு தொடர்புடையவைகளாயிருக்கின்றன. பிரயோஜனமற்ற இந்த எண்ணங்களை நீக்குதல், கனத்துக்குரிய மற்றும் உண்மையுள்ளவைகளுக்கு கிறிஸ்து இயேசுவுக்குள் புது சிருஷ்டியாக நமது சந்தர்ப்பத்தையும் சக்தியையும் பயன்படுத்துவற்கு பிரயோஜனமாக இருக்கும்.

“நீதியுள்ளவைகள்” இங்கே வேறொரு வரம்பு இருக்கிறது, நீதியாய் இருப்பது எதுவோ அதுவே சரியானதாகவும் இருக்கிறது. நீதியும் நியாயமும் ஒத்த சொற்கள். பெரும்பாலும் நீதியாய் இருப்பது எதுவோ அது அழகானதாகவும் இருக்கிறது. உதாரணத்திற்கு பொன்னான பிரமாணம், “மற்றவர்கள் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீ விரும்புகிறாயோ, அதையே நீ பிறருக்குச் செய்.” இது அன்பின் கட்டளை அல்ல, ஆனால் நீதியின் கட்டளை. மற்றவர்கள் நமக்கு என்ன செய்யக்கூடாது என்று நினைக்கிறோமோ அதை நாம் மற்றவர்களுக்கு செய்ய நமக்கு எந்த உரிமையும் கிடையாது. பொன்னான பிரமாணத்தை கடைபிடிப்பதில் நாம் அன்பின் பிரமாணத்தை கடைபிடிக்கவில்லை. ஆனால் சரியான திசையில் நாம் அடி எடுத்து வைக்கிறோம். ஒருவன் நேர்மையான மனிதனாக ஆகும் வரை அன்பைப் பற்றி நினைக்க ஆரம்பிக்கக்கூடாது. நியாயமானதைக் காட்டிலும் அன்பு இன்னும் மேலானது. அன்பானது நீதியைக் காட்டிலும் அதிகம். நீதியைக் காட்டிலும் அதிகமானதை கேட்க நமக்கு உரிமையில்லை. நீதியைக் காட்டிலும் நாம் அதிகமாக பெறுவது அன்பு தான், ஆதரவுதான்.

**நீதி நமது வாழ்க்கையின் கோட்பாடாக இருக்க வேண்டும்**

சிந்தனைப் பற்றி அப்போஸ்தலர் கூறுவது போல முதலாவது நாம் நமது மார்க்கத்தை பற்றி நினைக்க வேண்டும். நாம் எப்பொழுதுமே நீதியான, நியாயமான காரியங்களை சிந்திக்கிறோமா என்று ஜாக்கிரதையாக கவனிக்க வேண்டும். இந்த காரியத்தில் நாம் தவறான எண்ணம் கொள்ளக்கூடாது. நீதியானது நமது வாழ்க்கையின் கொள்கையாக, நமது நடத்தையாக இருக்க வேண்டும். இதைப்பற்றி நாம் நினைக்கும் போது, இயற்கையாகவே நாம் மற்றவர்களது நடத்தையைப் பற்றி சிந்திப்போம். உதாரணத்திற்கு பல்வேறு காரியங்களின் தாக்கத்தைக் குறித்து சிந்திப்போம்; நாம் நம் மனதை நம்மைச் சுற்றியும் வேறெங்கும் நடக்கும் அநீதிகளைக் குறித்து சிந்திக்க அனுமதிப்போம். ஆப்பிரிக்காவில் அவர்களை ஆளுகிறவர்கள் மூலமாக எவ்வளவு அநீதி நடைபெறுகிறது; வியாபாரம் முதலியவைகளில் எவ்வளவு அநீதி நடைபெறுகிறது, இப்படியாக அநேக முணுமுணுப்புகள் இருக்கும். நமது பொதுவான சிந்தனைகளில் இது இடம்பெறக்கூடாது. நாம் நல்ல காரியங்களையும் உயர்வான காரியங்களையும் சந்தோஷமான காரியங்களையும் சிந்திக்க வேண்டும். இந்த வாழ்க்கைக்குரிய நல்ல காரியங்களை மாத்திரம் அல்ல, வரக்கூடிய வாழ்க்கையின் ஆசீர்வாதமான காரியங்களையும் நினைக்க வேண்டும். இப்படியாக நமது மனம் எல்லா நேரங்களிலும் நீதியின் திசைகளில் ஓட வேண்டும்.

**நாம் கர்த்தரின் தண்டிக்கும் கரத்திற்காக காத்திருக்கக்கூடாது**

நீதி என்ன என்பதை உணர்ந்து கொள்ளாமல் நீதியை வளர்க்க முடியாது. இதற்கு தேவையான அறிவு வேதவாக்கியங்களிலிருந்து பெறப்படுகிறது. சிலர் மற்றவர்களைக் காட்டிலும் நீதியைக் குறித்து அதிக அறிவுள்ளவர்களாக பிறந்திருக்கிறார்கள். சிலர் நல்லது அல்லது கெட்டதை உணர்ந்துகொள்ள முடியாதவர்களாக பிறந்திருக்கிறார்கள். சுபாவத்தில் நாம் நீதியைக் குறித்து அறிவு உடையவர்களாவோ அல்லது இல்லாதவர்களாகவோ இருந்தாலும் வேதாகமம் தான் நியமமாக இருக்கிறது. மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோமோ, அதையே நாம் மற்றவர்களுக்கு செய்ய வேண்டும் என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. மற்றவர்கள் நம்மை மன்னிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பைப் போல நாம் மற்றவர்களை மன்னிக்க வேண்டும். இந்த முதல் பாடங்களை நன்றாக கவனித்திருக்கும் போது, நாம் நீதியை வளர்க்கவும் நமது அனுதின வாழ்க்கையில் அப்பியாசப்படுத்தவும் நாம் தயாராகிறோம். என்னுடைய வார்த்தையிலும் கிரியைகளிலும் நான் உண்மையே சொன்னேனா? இதைச் சொன்னது நீதியானதா? இதைச் சொன்னது சரியானதா? மற்றவர்கள் என்னுடைய காரியங்களை சொல்ல விரும்புவற்கு இசைவாக அது இருக்கிறதா? நான் சரியானதைச் செய்கிறேனா? என்று நாம் கேட்டுக்கொள்வதின் மூலம் நாம் இதை செய்கிறோம்.

கிறிஸ்துவின் பள்ளியில் இருக்கிறவர்கள் நீதி மற்றும் அன்பின் வழியில் படித்து அப்பியாசப்படுத்த வேண்டும். அது வாழ்நாள் முழுவதும் செய்ய வேண்டிய வேலை. அனுதினமும் நாம் முன்னேறுவதை நாம் காணக்கூடும். கர்த்தர் நம்மை தண்டிக்கும் வரை காத்திருக்கக்கூடாது. நமது சிந்தனைகளை சோதித்துப் பார்த்து, கர்த்தருடைய சித்தம் நம்மில் நிறைவேற விருப்பம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். நாம் விழிப்புள்ளவர்களாய் நடக்க வேண்டும். நாம் எதைப் பற்றி நினைக்கிறோம், எதைச் செய்கிறோம் என்பதை சிந்திக்க வேண்டும். நமது சிந்தனைகளை அலைபாய அனுமதிக்கக் கூடாது. அப்படி செய்கிற ஜனங்கள் சரியான பிடியின் கீழ் தங்களை வைத்திருக்க மாட்டார்கள். சித்தமானது வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்துகிறது. முதலாவது, நமது

சித்தங்கள், நமது சிந்தனைகளின் மேல் கட்டுப்பாடு, நமது வார்த்தைகள், நமது கிரியைகள் அனைத்தையும் கர்த்தரிடம் கொடுத்து முழு அர்ப்பணம் செய்ய வேண்டும். தங்களது காரியங்கள் மேல் கிறிஸ்துவின் கட்டுப்பாட்டை ஏற்றுக்கொண்டவர்கள் தங்கள் இஷ்டப்படி செய்ய சுதந்தரம் இல்லாதவர்கள். அவர்கள் அவரது வார்த்தையினால் கட்டுப்பாடு பண்ணப்படுகிறவர்களாகவும் அவரது நியமத்தின் படி நடக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். நமது ஆண்டவர் சொன்னதாவது: "நான் உங்களில் அன்பாயிருந்தது போல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்கு கொடுக்கிறேன்." (யோவான் 13:34) இது நீதியைக் காட்டிலும் மேலானது. கர்த்தர் அவர்களுக்காக தம் ஜீவனைக் கொடுத்து இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். அதே போல நாமும் நம்முடைய சகோதரர்களுக்காக ஜீவனை கொடுக்க தயாராயிருக்க வேண்டும்.

நமது மனம் அநீதியான காரியங்களில் செல்லும்படி நாம் அனுமதிக்கக்கூடாது. நாம் கற்றுக்கொள்ளும் போது இந்த நீதியின் சோதனையை நமது எண்ணம், வார்த்தை மற்றும் நமது கிரியைகளில் உபயோகிக்க கற்றுக்கொள்ள வேண்டும். அதே சமயம் மற்றவர்களது நடத்தையை கவனிக்கும் போது இரக்கம், தயவு, மன்னித்தல், உதவுதல் போன்ற நோக்கில் பார்க்க வேண்டும். நாம் வரவேற்கிற ஒவ்வொரு எண்ணத்தையும் எப்படி குறை கூறுகிறோம் என்பதில் நாம் மிக அதிக ஜாக்கிரதையாக இருக்க முடியாது. நமது இருதய அங்கீகாரத்தின் நீதிமுறை எந்த வகையிலும் மீறப்படாதபடி நாம் ஒவ்வொரு திட்டத்திலும் முதிர்ச்சி அடையலாம்.

### பரிசுத்தமுள்ளவைகளிலும் அன்புள்ளவைகளிலும் நமது மனது நிறைந்திருக்க வேண்டும்

பரிசுத்தத்தின் கண்ணோட்டத்தில் நமது எண்ணங்களை ஆய்வு செய்யும் போது, முதலாவது எண்ணங்களின் இயல்பு; இரண்டாவது மற்றவர்களின் மேல் அவற்றின் தாக்கம். நமது எண்ணங்கள் உண்மையானதாகவும், கனத்துக்குரியதாகவும். நீதியானதாகவும் சரியானதாகவும் இருந்தால் மட்டும் போதாது. அவைகள் பரிசுத்தமானதாகவும் இருந்து மற்றவர்களை தூய்மையற்றவைகளுக்கு உற்சாகப்படுத்துவதாக இருக்கக்கூடாது. தூய்மையற்றதாக இல்லாதிருந்தாலும், மற்றவர்களிடத்தில தூய்மையற்ற தன்மையை தூண்டுகிற எதையும் தவிர்க்க வேண்டும். நாம் எப்பொழுதும் நமது எண்ணங்களை காக்க வேண்டும் என்பதே அப்போஸ்தலரின் எண்ணமாக தெரிகிறது.

நாம் நமது சிந்தையை அன்பில்லாதவைகளிலும், பாராட்டத்தக்கதல்லாதவைகளிலும் லயித்திருக்க அனுமதிக்கக் கூடாது என்பதில் "அன்புள்ளவைகளெவைகளோ" என்பது நமது கவனத்தை ஈர்க்கிறது. நமது எண்ணத்தை நமது வியாபாரத்திற்காக தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக அனுமதிக்கிறோம். உதாரணத்திற்கு, இரும்பு வியாபாரம் செய்கிறவர் கட்டுமான இரும்பைப் பற்றி எப்பொழுதும் நினைப்பார்; மற்றவர் நிலக்கரி வியாபாரத்தை நினைப்பார்; மற்றவர் உருளைக்கிழங்கு, பண்ணா மீன் முதலானவைகளைப் பற்றி நினைப்பார். இவைகள் நீதியுள்ளவைகளாகவும், உண்மையுள்ளவைகளாகவும், நேர்மையானவைகளாகவும் இருந்தாலும் இந்த வகையிலே நினைத்துக் கொண்டிருப்பது புது சிருஷ்டிக்கு பிரயோஜனமாயிருக்காது. நாம் தோண்டுகிற வேலையில் இருந்தால் அதில் நமது சிந்தையை செலுத்த வேண்டும். இரும்பு வேலை தொழிலில் இருந்தால் அதில் நமது முழு கவனத்தையும் செலுத்த வேண்டும். ஆனால் தொழிலில் இருக்கும் போது அதைப்பற்றி சிந்திக்காமல், அப்போஸ்தலர் விதித்தவைகளில் சிந்தித்தால் அது தீமையாக இருக்கும். நமது கர்த்தரின் குணலட்சண சாயலுக்கு நாம் மறுரூபமாகும் வகையில் நமது சிந்தனைகள் கீழாக்கப்படவும் பழக்குவிக்கப்படவும் நாம் முயற்சிக்க வேண்டும்.

நமது எண்ணங்கள் உண்மையானவைகளாக, ஒழுக்கமுள்ளவைகளாக நீதியுள்ளவைகளாக இருந்தால் மட்டும் போதாது. அவைகள் கற்புள்ளவைகளாகவும் அழகானவைகளாகவும் இருக்க வேண்டும். அழகு என்ற வார்த்தையின் மூலம் நாம் புரிந்து கொள்ளுவது, இயற்கை, பூக்கள், மிருகங்களின் படைப்பு, பழங்கள் முதலானவைகளை மாத்திரமல்ல, முக்கியமாக குணலட்சண காரியங்களேயாகும். அதாவது ஆவியின் கனிகளும் கிருபைகளுமாகிய சாந்தம், தயவு, பொறுமை, நீடிய பொறுமை, சகோதர சிநேகம் மற்றும் அன்பு ஆகியவை. இவைகளால் நமது சிந்தைகள் நிரப்பப்படவும் ஈர்க்கப்படவும் வேண்டும். மாறாக, கற்புள்ளவைகளையும், நீதியுள்ளவைகளையும் அன்புள்ளவைகளையும் புறக்கணித்தால் ஆவியின் கனிகளில் நாம் வளரமாட்டோம். ஆனால் இவைகளை நமது இருதயத்தில் நினைத்து அபிவிருத்தி செய்தால் நாம் அதிகமதிகமாக தேவனைப் போல ஆவோம். விரும்பத்தக்க இந்த குணலட்சணங்களை நாம் வளர்க்கவில்லையென்றால், பொறாமை, பகைகள், சண்டைகள், சாத்தான் மற்றும் மாம்சத்தின் கிரியைகள் அபிவிருத்தி அடைந்து நீதிக்கு மாறான கனிகள் உண்டாகும்.

சுருக்கமாக, சரியான எண்ணங்களின் முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்ய முடியும். இயற்கையாக சிந்தையில் சீரழிந்தவர்களையும் சத்தியத்தை சிந்திக்க அதிக முக்கியத்துவம் கொடுத்தவர்கள் உயர்ந்த குணலட்சணம் உடையவர்களானதையும் பற்றிய பதிவுகள் இருக்கின்றன. சரீரத்தின் மேல் எண்ணத்தின் சக்தியை மிகைப்படுத்தி கூற இயலாது. ஆவியின் கனிகளை அபிவிருத்தி செய்வதில் நாம் சந்தோஷம் காண்போமானால், அது நமக்கும் மற்றவர்களுக்கும் ஆசீர்வாதத்தை கொடுக்கும். இப்படியாக ஆண்டவரின் அடிச்சுவட்டை பின்பற்றி இறுதியில் ஜெயங்கொண்டவர்களாகவும் அவருடன் ராஜ்யத்தில் இணைவோராகவும் ஆவோம்.

### சிந்தனையில் பரிசுத்தம் அவசியம்

பரிசுத்தமில்லாதது நமக்கு வலியையும் துன்பத்தையும் கொடுக்கிற அளவுக்கு நாம் பரிசுத்தத்தை நேசித்து அபிவிருத்தி செய்ய வேண்டும். பரிசுத்தமில்லாததை நமது நினைவிலிருந்து நீக்க விரும்ப வேண்டும். பரிசுத்தமானவைகளையே தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருப்பதும் பரிசுத்தமில்லாததை தவிர்ப்பது மூலமே இதை நிறைவேற்ற முடியும். உண்மையான அன்பை அங்கீகரித்து மதிக்க வேண்டும். மிகவும் பரிசுத்தமானவைகளை சிந்திக்கும் போது, முடிந்தவரை நமது மனதின் பார்வை உயர்ந்து இருப்பது அவசியம். நம்மால் முடிந்தவரை, நமது தேவன் மற்றும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பரிபூரண குணலட்சணத்தின் அன்பை பகுத்துணர வேண்டும். அதன் விகிதாச்சாரப்படி இயேசுவின் அடிச்சுவட்டில் நெருக்கமாக நடக்கிற அவரது சீஷர்களின் ஒருவருக்கொருவரின் அன்பு வெளிப்படுத்தப்பட்டது.

"புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்." நாம் புகழைப் பற்றி நினைக்கவோ அதை அடைய முயற்சிக்காமலோ இருக்கும்

போது, நாம் பாராட்டத்தக்கவர்களாக இருக்க முயற்சிக்க வேண்டும். தேவனுடைய புகழைக் குறித்து நினைக்க வேண்டும். தகுதியுள்ளதை, புண்ணியத்தை, பாராட்டத்தக்கதை நாம் அங்கீகரிக்க வேண்டும். நம்மைச் சுற்றி இருக்கிறவர்கள், குறிப்பாக சபையில் உள்ளவர்களில் பாராட்டத்தக்க குணலட்சண அம்சங்கள் என்ன என்பதை நாம் கவனிக்க வேண்டும்.தயவு, விசுவாசம் மற்றும் பொறுமை ஆகியவைகளை குறைத்து மதிப்பிடக்கூடாது. கடமையில் அர்ப்பணம், சக்தி, நிலைத்தன்மையை நாம் கவனிக்க வேண்டும். மற்றவர்களின் அற்பமான தோல்விகளையோ அல்லது பெரிய தோல்விகளையோ நாம் நினைக்கக்கூடாது. சந்தோஷமில்லாத காரியங்களை நமது மனதில் தொடர்ந்து வைப்போமானால் நமக்கு நாமே தீமை செய்து கொள்ளுகிறோம். நம்முடைய வாழ்க்கையில் நம்மைச் சுற்றியிருக்கிறவர்களின் வாழ்க்கையில் இருக்கும் பாராட்டத்தக்க காரியங்களை தொடர்ந்து நாம் அங்கீகரித்தால் நாம் தேவனைப் போன்றவர்களாவோம்.

புண்ணியம் அல்லது மதிப்பான காரியங்கள், பாராட்டத்தக்க காரியங்கள், அதாவது மற்றவர்களின் உயர்ந்த வார்த்தைகள் அல்லது உயர்ந்த கிரியைகள் அல்லது உயர்ந்த உணர்வுகளை நாம் தியானித்தால் நமது சிந்தை, நமது புதிய சுபாவத்தின் சீர்மையை நோக்கி அபிவிருத்தி அடைவதை நாம் காண்போம்.

இப்படியாக நமது சிந்தையை புதுப்பித்தலின் மூலம் நாம் அதிகமதிகமாக மறுரூபமடைவோம்; தற்கால வாழ்க்கையில் சிறிது சிறிதாக, படிப்படியாக, அங்குலம் அங்குலமாக மகிமை மேல் மகிமையடைந்து நமது ஆண்டவரின் சாயலில் நெருக்கத்தின் மேல் நெருக்கம் அடைவோம். நமது சிந்தைகள் இந்த மனோபாவத்தில் இருந்து, கர்த்தருடனான ஐக்கியம் பராமரிக்கப்பட்டு, முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவோம். அது கர்த்தரின் சாயல் மற்றும் ரூபத்திற்கு நித்தியமாக நம்மை பூரணப்படுத்தும்.

**R4828**

## SOWING AND REAPING
## விதைத்தலும் அறுத்தலும்

" மோசம் போகாதிருங்கள்... தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்." கலாத்தியர் 6:7,8

விதைத்தல் என்பது பலனை அல்லது அபிவிருத்தியை எதிர்பார்த்து செய்கிற காரியம். சில காலம் கழித்து அறுவடை வரும். நம்முடைய அனைத்து எண்ணங்களுக்கும், நமது அனைத்து கிரியைகளுக்கும் எதிர்கால குணலட்சணத்தில் விளைவு இருக்கும். கொஞ்சம் கொஞ்சமாக குணலட்சணமானது உருவாகிறது. இன்றைய விதைப்பு நாளைய அறுவடையை கொண்டுவரும். நமது சிந்தனைகளும் நமது கவனிப்புகளும் பூமிக்குரியவைகளுக்கு கொடுக்கப்பட்டால் பூமிக்குரிய காரியங்களில் பலனும் பெருக்கமும் இருக்கும். ஆனால் பரலோக காரியங்களுக்கு நமது சிந்தனைகளும் கவனிப்புகளும் இருந்தால் ஆவிக்குரிய வகையில் அபிவிருத்தி இருக்கும்.

மாம்சத்திற்கென்று விதைத்தல் என்பது மாம்சீக காரியங்களை கவனித்து, மாம்சத்தின் விருப்பங்களை, விழுந்து போன சுபாவத்தின் ஆசைகளை திருப்தி செய்தல் ஆகும். பலன் கிடைத்தால் இந்த ஆசைகள் பலமாக வளரும். மாம்சத்தின் நியாயமான ஆசை சரியானது தான் என்று சிலர் கூறுவது தவறு. விழுந்து போன மாம்சத்தில் ஒவ்வொரு ஆசையையும் விலங்கின மனோபாவத்தை திருப்தி செய்கிறது. இந்த மனோபாவத்தையே தொடர்ந்து விளைவிப்பவர்கள் முடிவாக கெட்டுப்போய் மரணத்தை, இரண்டாம் மரணத்தை அடைவார்கள். ஆவிக்குரிய காரியங்களை கவனிப்பவர்கள் பூமிக்குரிய காரியங்களின் மேல் அல்ல, பரம காரியங்களின் மேல் பற்று வைப்பார்கள். தங்களை ஆவிக்குரிய திசையில் அபிவிருத்தி செய்ய நாடுபவர்கள் ஆவிக்குரிய காரியங்களை அடைவதில் முன்னேறுவார்கள். ஏற்ற காலத்தில் கர்த்தரின் குணலட்சண சாயலை அறுப்பார்கள். சத்தியத்தின் மூலம் மென்மேலும் சுத்திகரிக்கப்பட்டு தேவனுடைய பிரியமான குமாரனின் சாயலை பெறுவார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நித்திய ஜீவன் பரிசாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது.

நமது தலைப்பு வசனம் "பலியினால் கர்த்தருடன் உடன்படிக்கை பண்ணினவர்களாகிய" சபைக்கு கூறப்படுகிறது. அப்போஸ்தலர் கூறுவது போல, இவர்கள் மாம்சத்தின்படி பிழைத்தால் சாவார்கள். ஏனெனில் அவர்கள் மாம்சீக ஜீவாதார உரிமைகளை முன்னரே அர்ப்பணம் பண்ணியிருக்கிறார்கள். தீவிர முயற்சியினால் மாம்சத்தை அழிப்பதின் மூலமும் அதை மரணத்திற்கு ஒப்புக் கொடுப்பதின் மூலமும், அவர்கள் பெற்றிருக்கிற பலவீனங்களை ஜெயங்கொள்ள முயற்சிப்பதின் மூலமும் தங்களது ஜீவனை கொடுக்கவும் புதிய வாழ்க்கையை அபிவிருத்திப் பண்ணவும் நாடினால், அவர்கள் சீக்கிரத்தில் அனைத்து தடைகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டு, புதிய சரீரத்தினால் அணிவிக்கப்படுவார்கள். பிறகு அவர்கள் கர்த்தரைப் போலிருப்பார்கள்.

### குணலட்சணத்திற்காக சொந்த பொறுப்பை சிலர் உணருகின்றனர்

நாம் நமது குணலட்சணத்தை எந்த அளவுக்கு உருவாக்குகிறோம்; எந்த அளவுக்கு நமது மனதும் பிரியமும் தோட்டமாக இருக்கின்றன; அதில் பாவமாகிய நெருஞ்சில்களையும் முட்களையும் விளைவிக்கப் போகிறோமா அல்லது அதில் நீதி மற்றும் நடைமுறைக்குரிய பண்புகளாகிய பயனுள்ள காய்கறிகளை அல்லது பரலோக அல்லது ஆவிக்குரிய கிருபைகளாகிய அழகான மலர்களையும் கனிகளையும் கொடுக்கிறவைகளை பயிரிடப்போகிறோமா என்பதை சிலரே உணர்ந்திருக்கிறார்கள். மனுஷன் மாம்சத்திற்கென்று அல்லது ஆவிக்கென்று எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். ஆகையால் பரலோக காரியங்களை ராஜ்யத்தில் உடன் சுதந்தரத்துவம் முதலானவைகளை நாடுகிறவர்கள் இந்த பண்புகளையும் கிருபைகளையும் பயிரிட வேண்டும் அல்லது அவருடைய மனதில் அல்லது அவரது பிரியத்தை வைக்க வேண்டும். இவைகளைத் தான் குணலட்சண அபிவிருத்திக்கு அத்தியாவசியம் என்று குறிப்பிடுகிறார். அப்படிப்பட்டவர்கள் "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரத்தில் பங்கடைவார்கள்." (கொலோசெயர் 1:12)

இப்படியாக, பிதாவானவர் இந்த "பரம அழைப்புக்கு"

இந்த "பரலோக அழைப்புக்கு" அழைத்து இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு இதன் கீழ் உடன்படிக்கை செய்த அனைவருக்கும், பரிசை பெறுவதில் வெற்றி பெறவோ அல்லது தோல்வியடையவோ பொறுப்பாக இதை வைக்கிறார். அவரது வசனத்தின் மூலம் அவர்களது சுபாவ பலவீனத்தையும் அபூரணத்தையும் கூறுகிறார். இந்த பலவீனங்களுக்காக எப்படி அவர் இரட்கரின் பலி மற்றும் புண்ணியத்தினால் ஈடுகட்டுகிறார் என்பதை அவர்களுக்கு காட்டுகிறார். கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராயிருப்பதற்கு இருதயத்தில் பெற்றிருக்க வேண்டிய ஆவியின் இலைகள் மற்றும் கனிகளையும் அவர் காண்பிக்கிறார். இதை அவர் இரட்சகரின் வாழ்க்கையிலும் அவரது போதனைகளிலும் கூட காண்பிக்கிறார். அதே மகிமையான தளத்தையும் அவரது உடன் சுதந்தரத்தை அடையவும் அனைவரும் பின்பற்ற வேண்டிய சாயலையும் காண்பிக்கிறார்.

இந்த காரியத்தை நமக்கு கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பின் நிலைப்பாட்டிலிருந்து நோக்க வேண்டும். அதன் மூலம் பெரும் வியப்பை உணர வேண்டும். சரியாக சொல்வோமானால் நாம் தெய்வீக கிருபையின் நிலைப்பாட்டிலிருந்து நோக்க வேண்டும். எப்படிப்பட்ட ஆசீர்வதிக்கப்பட்டுள்ள சலுகை நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். நமது மனங்கள் புதுப்பிக்கப்படுகிறதினால் நாம் மறுரூபமாக்கப்படுகிறோம். தேவனுடைய நன்மையான, பிரியமான மற்றும் பூரணமான சித்தத்தை அதிகமதிகமாக அறிந்து அதற்காக பாடுபடவும் வேண்டும். இவைகளோடு கூட நமது புத்தியுள்ள ஆராதனையும் நமது வெறும் கடமையையும் செய்வதற்காக, எண்ணி முடியாத பெரும் பரிசை தேவன் நமக்கு முன்னால் வைத்திருக்கிறார். அதை செய்யும் போது எதிர்கால பரிசோடு கூட அதிக அளவில் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் நமக்கு கொண்டு வரும். (2பேதுரு 1:3,4)

### நாம் நல்ல விதைகளை விதைத்து தொடர்ந்து தீமைகளை களையெடுக்க வேண்டும்

அனைத்து மனுக்குலத்திற்கும் பூமிக்குரிய காரியங்களில் ஒரு இயற்கையான ஈர்ப்பு இருக்கிறது. நீதியை நேசிக்கவும் அக்கிரமத்தை வெறுக்கவும் கற்றுக்கொண்டவர்களுக்கு இந்த தீமையின் ஆட்சியில் பூமிக்குரிய காரியங்கள் கறை படிந்தவைகளாகவும் அநேக அம்சங்களில் அருவருப்பானதாகவும் இருக்கின்றன. எனினும் ஒரு பலமான ஈர்ப்பு பூமியின் கறைபடிந்த மற்றும் சிதைந்து போன காரியங்களில் இருக்கின்றன. களைகளைப் போல, விதைகளிலிருந்து பூமிக்குரிய நேசமும் விருப்பங்களும் தன்னிச்சையாக ஊருகின்றன. அது எங்கிருந்து வருகிறது என்பதை நாம் அறியோம். ஆகையால் தேவனுடைய அன்பில் தங்களது இருதயத்தை வைக்கிறவர்கள், நல்ல விதைகளை விதைப்பது மாத்திரமல்ல, பரலோக காரியங்களில் தங்களது பிரியத்தை வைத்து, ஆனால் களைகளாகிய பூமிக்குரிய விருப்பங்களையும் ஈர்ப்புகளையும் அடியோடு நீக்க வேண்டும்.

நமது புது வாழ்க்கை யாருக்கும் எந்த சமயத்திலும் வெளிப்படுத்தப்படுகிறதில்லை. அப்போஸ்தலர் அவர் கூறும் போது அறிவிக்கிறதாவது: "உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது." அது புதிய விருப்பத்தில் புதிய நோக்கத்தில் புதிய ஆசையின் வாழ்க்கையாக இருக்கிறது. அதை உலகம் பார்க்கவோ முழுவதும் உணர்ந்து கொள்ளவோ முடியாது. எனினும் நமது அனுதின நடக்கையில் புதிய வாழ்க்கையில் வெளிப்படுத்துதல்களை காண்பார்கள். "சகோதரர்கள்" கூட நம்மில் புது வாழ்க்கையில் முன்னேற்றங்களை உணர்ந்து கொள்ள முடியாது. நாம் கூட சில சமயங்களில் நமது வளர்ச்சியில் அதிவேகத்தையும் பலத்தையும் குறித்து குழப்பமடைவோம். நமது புதிய வாழ்க்கை வளர்கிறது என்பதை கண்டுபிடிக்க வாரங்களோ, மாதங்களோ அல்லது வருடங்களோ பின்நோக்கி பார்க்க வேண்டியிருக்கலாம். கிறிஸ்துவின் சித்தத்தை பின்பற்றுகிற நமது முயற்சிகளின் மூலம் குறிப்பிடப்படுகிற நமது புதிய ஜீவன் கிறிஸ்துவுடனே கூட தேவனுக்குள் மறைந்திருக்கிறது.

இந்த கருத்துக்கு இசைவாக அப்போஸ்தலர் ஒரு இடத்தில் கர்த்தரைத் தவிர உலகமோ அல்லது சகோதரர்களோ அவனை (புது சிருஷ்டியை) நிதானிக்க முடியாது என்று அறிவிக்கிறார். இருதயத்தை அறிகிறவரும் எல்லா நிலைமைகளையும் அறிகிறவரும், சோதனைகளையும் பலவீனங்களையும் எதிர்த்து போராடுகிறதையும் அறிந்த கர்த்தர் மட்டுமே நியாயந்தீர்க்க முடியும். அப்போஸ்தலர் அறிவிக்கிறதாவது: "நானும் என்னைக் குறித்து தீர்ப்பு சொல்லுகிறதில்லை." (1கொரிந்தியர் 4:3) கர்த்தரின் சித்தத்தை செய்ய நாம் உண்மையுடன் பாடுபடுகிறவர்களாக இருந்தால், நாங்கள் கர்த்தருடைய பிள்ளைகளாக மனசாட்சியுடன் நடக்கிறோம் என்று கூறிக்கொள்ளுகிறவர்களையும் நம்மையும் கூட கண்டனம் செய்யாதிருப்பது சிறப்பான திட்டமாக இருக்கிறது. நாம் அனைத்து பலன்களையும் கர்த்தரிடம் விட்டுவிட்டு, ஒவ்வொரு நாளும் பரலோக கிருபைகளை விருத்தி செய்யவும் ஆண்டவருக்கு ஊழியம் செய்யவும் நம்மால் முடிந்ததை செய்ய வேண்டும். அவர் நம்மை கவனித்துக் கொள்ளுகிறார். நமது வாழ்க்கையின் நம்பிக்கையும், நோக்கமும் இலக்கும் பரலோக காரியங்களை மையப்படுத்தி, நமது ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கும் வரை தற்காலத்திலோ எதிர்காலத்திலோ நமக்கு தீமையின் பயம் இருக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் கர்த்தர் நம்முடனே இருப்பார். நம்மை ஆசீர்வதித்து, விழாமல் பாதுகாத்து முடிவாக நம்மை குற்றமற்றவர்களும் களங்கமற்றவர்களுமாக பரலோக பிதாவினிடத்தில் சமர்ப்பிப்பார்.

### களைதலும் அணிதலும்

கர்த்தரிடம் முழுவதுமாக அர்ப்பணம் செய்தவர்களிடம் நடக்கும் முக்கியமான மாற்றங்களைக் குறித்து அப்போஸ்தலர் குறிப்பிட்ட குணலட்சண மாற்றங்களை கணக்கிடுகிறார். அவைகள் முயற்சிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். கீழ்க்கண்டவைகளை அவர்கள் விட்டுவிட வேண்டும். கோபம், மூர்க்கம், பொறாமை, தூஷணம் மற்றும் வம்பு வார்த்தை முதலானவை. (கொலோசெயர் 3:3) வாழ்க்கையின் இப்படிப்பட்ட திருத்துதல்களின் அவசியத்தை குறிப்பிடுவது அவசியமற்றதாக காணப்படலாம். இப்படிப்பட்ட கெட்ட குணங்கள் கிறிஸ்தவ கொள்கைகள் அனைத்திற்கும் முற்றிலும் மாறானது. ஆனால் நாம் காரியத்தை ஆராயும் போது, "கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டி" ஆகிறவர்களை சூழ்ந்து கொள்ளும் அனைத்து மாம்ச பலவீனங்களையும் அப்போஸ்தலர் பட்டியலிடுகிறார் என்று நாம் காண்கிறோம்.

கோபப்படுவதைக் காட்டிலும் கிறிஸ்தவ ஜனங்களிடம் மிகவும் பொதுவாக காணப்படுவது எது? கிறிஸ்துவின் நாமத்தை தரித்துக் கொண்டவர்களில் எவ்வளவு பேர் தீயவர்களாகவும் மற்றவர்களிடம் அன்பற்றவர்களாகவும், சில சமயங்களில் அவர்களது நடத்தையில் காண்பிக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள்! எவ்வளவு பேர்

கெட்ட பேச்சுகளில் அதாவது அவதூறு பேசுவதில் ஈடுபடுகிறார்கள்! அது அடிக்கடி ஏமாற்றுவது போல செய்யப்படுகிறது. கேட்கிறவர் மாத்திரமல்ல, பேசுகிறவரும் மற்றவர்களை இழிவுபடுத்துகிற மற்றும் அன்பற்ற நோக்கத்தோடு செய்கிறார்.

தீமையான மற்றும் அசுத்த பேச்சுக்கள் அனைத்தும் தவிர்க்கப்பட்டால் இது எப்படி ஒரு அற்புதமான உலகமாக இருக்கும்! ஆகையால் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனது வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையும் கேட்கிறவர்களுக்கு கிருபையானதாகவும் நன்மையையும் மேன்மையானதையும் செய்யக்கூடியதாகவும் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். முடிவாக எவ்வளவு தேவைப்படுகிறது பாருங்கள். இருதயத்தில் நல்ல நோக்கத்தை பெற்றிருப்பதோடல்லாமல், அதை ஒருவருக்கொருவர் வஞ்சம் இல்லாமல் ஏமாற்றுதல் இல்லாமல் வெளிப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. இருதயம் மிகவும் சுத்தமானதாகவும் அன்பு நிறைந்ததாகவும் மிகவும் உண்மையுள்ளதாகவும் இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. இல்லையென்றால் தொடர்ச்சியான துன்பத்திற்கு வழிநடத்தும். அன்பின்மை, பெருந்தன்மையின்மை, அன்பற்ற இருதயம், தீய எண்ணம், பொறாமை, பகைகள் சண்டைகள் ஆகியவை வெளிப்படுத்தப்பட்டால் உலகின் துன்பங்கள் மிகவும் அதிகமாக வரும். ஆகையால் அப்போஸ்தலர் முதலில் இருதயத்தை பரிசுத்தப்படுத்திவிட்டு பொதுவான நேர்மைக்கு செல்ல வேண்டுமென்று வலியுறுத்துகிறார்.

கிறிஸ்துவின் சரீரத்துக்குள் ஏற்றுக்கொள்ளப் -பட்டவர்களாக நமது மனதில் ஒற்றுமை மற்றும் சமம் என்ற சிந்தையுடன் நமது மாம்சீக பலவீனத்தின் தீய குணங்களை நீக்குவதில் கவனம் செலுத்துவதோடல்லாமல், நமது தலையானவரிடத்தில் உதாரணமாக காண்பிக்கப்பட்ட பல்வேறு ஆவியின் கிருபைகளை அணிந்து கொள்ளும்படி விருத்தி செய்ய வேண்டும் என்று அப்போஸ்தலர் வலியுறுத்துகிறார். (கொலோசெயர் 3:12-14)

அவர் இவைகளை குறிப்பிடுகிறார்: (1) இரக்கமுள்ள மனோபாவம்; எல்லாரிடமும் எல்லாவற்றின் மேலும் அதாவது பரிசுத்தவான்கள், அயலான், நண்பர்கள், உறவினர்கள், நமது விரோதிகள் மற்றும் மிருகங்கள் மேல் பெருந்தன்மையான குணம். அவர் இதை தொடர்ந்து பெருக்குவதைக் குறிக்கும். (2) எல்லாரிடமும் இரக்கம் காண்பித்தல்; (3) மனத்தாழ்மை- தற்பெருமை, முரட்டுத்தனம், இறுமாப்புக்கு எதிரானது. (4) சாந்த குணம் (5) நீடிய பொறுமை அல்லது மற்றவர்களின் தவற்றையும் பலவீனத்தையும் பொறுமையுடன் சகித்தல்; ஒருவருக்கொருவர் இயற்கையான மனோபாவத்தையும் குணத்தையும் பொறுத்துக் கொண்டு, ஏதாவது குற்றம் இருந்தால் ஒருவரையொருவர் மன்னித்துக் கொண்டு, நமது கறைகள் மற்றவர்களில் பிரதிபலிப்பதினால், இதற்கிடையில் நம்மை திருத்திக் கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை குறிக்கிறது. இந்த நடத்தைக்கான மார்க்கத்தின் தரநிலை நம்மை நோக்கிய கர்த்தரின் மார்க்கத்தில் காணப்படுகிறது. ஏனெனில் அவர் நிச்சயமாக பெருந்தன்மையாக, அன்பாக, சகிப்புத்தன்மை உடையவராக மற்றும் மன்னிக்கிறவராக இருந்தார்.

**இந்த கட்டளைகள் சபைக்கு சொல்லப்படுகின்றன**

அப்போஸ்தலர் இந்த வழிகளில் உலகத்தை சீர்திருத்த முயற்சிக்காமல் கர்த்தருடன் ஒரு விசேஷித்த உடன்படிக்கைக்குள் நுழைந்திருக்கிறவர்களை சீர்திருத்தவே முயற்சிக்கிறார் என்று "பரிசுத்தமும் பிரியருமான" தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் கவனத்துக்கு கொண்டு வருகிறார். இப்படியாக கர்த்தருடன் உடன்படிக்கை பண்ணின அனைவரும் மகிமையான சபையின் அங்கத்துவத்துக்கு தங்களது "அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தும்" நம்பிக்கை உடையவர்களும் தங்களது சொந்த வாழ்க்கையில் இந்த ஆவிக்குரிய கனிகளை அபிவிருத்தி பண்ண நாடுவதோடல்லாமல், இதே கனிகளை கிடைக்கும் சந்தர்ப்பத்திற்கு தக்கதாக தங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டார்களும் அபிவிருத்தி செய்ய உதவுவார்கள். இவையெல்லாவற்றிற்கும் மேலாக தங்களது குடும்பத்தார் மேல் தங்களது செல்வாக்கை பயன்படுத்த நாடுவார்கள். அவர்களது பெற்றோர்களும், பிள்ளைகளும் உலக வாழ்க்கைக்கு தேவையானவைகளை அவர்களிடமிருந்து பெறுவது போல, முடிந்தால் புதிய வாழ்க்கைக்குரிய தேவையான அறிவுறுத்தல்களையும் உபகரணங்களையும் பெறுவார்கள்.

ஆனால் அப்போஸ்தலர் பரிசுத்த ஆவியின் கருவியாக, முழுமையான போதகராக இருக்கிறார். நீக்கினால் என்ன அவமானம் கிடைக்கும் அணிந்தால் என்ன கிருபை கிடைக்கும் என்பதை மட்டும் கூறாமல், இருதய குணலட்சணங்களாகிய மனதுருக்கம், அன்பு, பணிவு, சாந்தம், பொறுமையுடன் சகித்தல் சகிப்புத்தன்மை மற்றும் மன்னித்தல் போன்றவைகளால் கர்த்தரின் சரீரத்தில் அணி வகுத்திருப்பதை பார்த்து, அவர் கூறுகிறதாவது: "இவை எல்லாவற்றிற்கும் மேலும் பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள்." இப்படியாக அன்பானது, பல்வேறு கிருபைகளுடனான கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தின் மடிப்புகளை இணைத்து பிடிக்கிற "கச்சையாக" சித்தரிக்கப்படுகிறது. வேறு வார்த்தையில் சொல்லுவோமானால், சகிப்புத்தன்மை, சாந்தம், பொறுமை முதலானவைகளை அப்போஸ்தலர் நம்மில் காண வேண்டும். வெறும் உபசாரத்திற்காகவோ அல்லது கொள்கையாகவோ அல்ல. எனினும் அநேகர் ஆரம்பத்தில் இந்த குணங்களில் பங்கு பெறுவார்கள். அவர்களது சித்தங்களின் பல்வேறு இந்த கிருபைகள் அல்லது நோக்கங்கள் அன்பின் கயிறுகளால் அவர்களுடன் கட்டப்படும் வரை, அவைகளை அணிந்து கொள்ளுபவர்கள் இருதயத்தை பூரணப்படவோ, ராஜ்யத்துக்கு தகுதியுடையவர்களாகவோ ஆகமாட்டார்கள். அன்பு என்பது கர்த்தருக்கான அன்பு, நீதிக்கான அன்பு, "சகோதரர்களுக்கான" அன்பு, தவித்து வேதனைப்படுகிற சிருஷ்டிகளுக்கான அனுதாப அன்பாக இருக்கிறது. உண்மையிலேயே அன்பு என்பது "பூரணத்தின் கட்டு," கர்த்தருடைய ஆவி.

**இந்த விஷயத்தில் நாம் வஞ்சிக்கப்பட முடியுமா?**

நமது தலைப்பு வசனத்தில் அப்போஸ்தலர், "மோசம் போகாதிருங்கள்" என்று கூறுகிறார். நாம் ஆவிக்காக விதைக்கிறோமா அல்லது மாம்சத்திற்காக விதைக்கிறோமா என்பதை அறியக்கூடாத ஆபத்தில் இருக்கிறோமா என்ற கேள்வி இயற்கையாக எழும்புகிறது. இந்த வகையில் வஞ்சிக்கப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது என்று நாம் பதிலளிக்கிறோம். மாம்சமானது மிகவும் தந்திரமுள்ளது என்றும் இயற்கையான மனது எல்லாவற்றிற்கும் மேலாக வஞ்சகமானது என்றும், புதிய சிந்தை, பழைய சுபாவத்தின் பொறிக்குள் விழுந்துவிடாதபடிக்கு, அதற்கு தொடர்ச்சியான பாதுகாப்பு தேவைப்படுகிறது என்றும் வேதவாக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஒருவன் மாம்சத்தின்படி வாழ்ந்தால் அதற்கேற்றபடி அறுக்க அவன் எதிர்பார்க்கலாம். மற்றவர்கள் வஞ்சிக்கப்பட்டாலும், நாம் உள்ளாக மாம்சத்தின்படி வாழும்

போது, தேவன் மற்றும் அவரது சத்தியத்திற்கான நமது வெளியரங்கமான ஊழியத்தினால் அவர் கேலி செய்யப்படமாட்டார். நாம் சோளத்தை விதைத்தால் சோளத்தைதான் அறுப்போம்; நாம் கோதுமையை விதைத்தால் நாம் கோதுமையை அறுப்போம். நமது வாழ்க்கையின் எல்லா காரியங்களிலும் ஒன்று அழிக்கப்பட வேண்டும் என்று நாம் ஒப்புக்கொண்டிருக்கிற பழைய சுபாவத்தை கட்டியெழுப்புகிறோம் அல்லது புது சிருஷ்டியாக நாம் வளம் பெற மாம்சத்தின் கிரியைகளை அழிக்கவோ கொல்லவோ உண்மையுடன் பார்க்கிறோம்.

நாம் "மாம்சத்திற்கென்று விதைக்கும்" ஒவ்வொரு சமயமும் நாம் மாம்சீக பிரகாரமான சுயநலம், அநீதி மாம்சத்தின் அநியாயமான விருப்பங்களை நமது வாழ்க்கையிலும் இருதயத்திலும் ஆட்சி செய்ய அனுமதிக்கிறோம். ஒவ்வொரு விதைப்பும் வழியின் முடிவை, மரணத்தை, இரண்டாம் மரணத்தை உறுதிப்படுத்துகிறது. மாறாக, ஆவிக்கென்று விதைக்கும் ஒவ்வொரு விதைப்பும், சுயநலம் முதலான ஒவ்வொரு மாம்சீக விருப்பங்களையும் எதிர்த்து, புதிய சிந்தனை, புதிய சித்தத்தில் ஒவ்வொரு செயல்பாடும் பரிசுத்தமானவைகளை, நேர்மையானவைகளை, நன்மையானவைகளை, உண்மையுள்ளவைகளை, ஆவிக்குரியவைகளை ஆவிக்கென்று விதைப்பதாக இருக்கிறது. இது தொடர்ந்து செய்யப்பட்டால் முடிவாக, கர்த்தருடைய கிருபையான வாக்குத்தத்தங்கள் மற்றும் ஏற்பாடுகளாகிய நித்திய ஜீவனையும் ராஜ்யத்தையும் அடைதலைக் கொண்டு வரும்.

**R4830**

## THE SIN UNTO DEATH
## மரணத்துக்கு ஏதுவான பாவம்

மானிட மனமானது அதன் பல்வேறு குணங்களுடன் ஒரு சட்டமன்றத்தை போன்றதாக இருக்கிறது. வாக்கு அல்லது தீர்மானமே அந்த அமைப்பின் விருப்பமாக இருக்கிறது. ஆகையால் நமது மனதின் தீர்மானமே சித்தமாக இருக்கிறது. ஒரு காலத்தில் நாம் சிறந்ததை நாம் அறியாததால் நமது வாக்கு பாவத்திற்காக இருந்தது. ஆனால் வெளிச்சம் உள்ளே வந்த போது, நாம் மாம்சீக சிந்தைக்கு ஓட்டளிக்காமல், புதிய சிந்தை ஆதிக்கம் செலுத்தும் புது சிருஷ்டியாக இருக்கும்படி கிறிஸ்துவின் சிந்தையில் ஓட்டளித்தோம். கிறிஸ்துவின் சித்தம் உள்ளே வந்த போது, பழைய சித்தம் மரித்தது என்று சொல்கிறது போல, "உலகின் மோசமான வழிபாடுகளுக்கு" மறுபடியும் திரும்பும் போது, பழைய சித்தம் புதுப்பிக்கபட்டு மரணத்திலிருந்து எழுப்பப்பட்டது என்று சொல்வது சரியாக இருக்கும் என்று நினைக்கிறோம்.

பழைய சித்தத்தை புதுப்பிக்கிற செல்வாக்கு எது? மாம்சீக காரியங்களைத் குறித்து அது அக்கறை கொள்ளுகிறது. நாம் மாம்சத்தின்படி ஜீவித்தால், நாம் புது சிருஷ்டியாக சாவோம். (ரோமர் 8:13) நாம் விட்டுவிட்ட மாம்சீக விருப்பங்களை அனுமதித்தால், அதிலிருந்து விடுதலை பெற்ற பிறகு, மீண்டும் ஆளுகைக்கு வந்தால் அல்லது நம்மை கட்டுப்படுத்தும் செல்வாக்காக ஆனால், நாம் மாம்சீக சித்தத்தை கவனிக்கிறோம். கர்த்தருடைய சித்தத்தைக் காட்டிலும் மாம்சீக சித்தத்தை நாடும் பொழுது பரலோக காரியங்கள் முதலானவைகளுக்கு பதிலாக பூமிக்குரிய காரியங்களை கவனிக்கும் போது, புதிய சிந்தை மரித்து பழைய சிந்தை அல்லது சித்தம் புதுப்பிக்கப்படுகிறது.

பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட, இன்னும் "திரைக்கு அப்பால்" செல்லாத அனைத்து புது சிருஷ்டிகளைப் பொருத்த வரையில், ஜீவிக்க வெறும் மாம்சீக சரீரத்தை மட்டுமே பெற்றிருக்கிறார்கள். இந்த சரீரமானது முதலில் புது சித்தத்தின் கட்டுப்பாட்டில் இல்லை. சரீரத்தை ஆட்சி செய்வதும் அதை முழுவதுமாக, மரண பரியந்தம் தனக்கு கீழ் கொண்டு வருவதும் புது சிருஷ்டியின் கடமையாக இருக்கிறது. இந்த வெற்றியை பெற்ற பிறகு, புது சிருஷ்டி அவனுக்கென்று தேவன் வைத்திருக்கிற புது சரீரத்தைப் பெறுகிறான். பாவத்திற்கான அதனுடைய எதிர்ப்பின் மூலம் தேவனிடம் விசுவாசத்தையும் நீதியினுடனான அதன் நல்லிணக்கத்தையும் விளங்கப்பண்ணுகிறது. தேவன் இந்த புது சிருஷ்டியை மாம்சத்தின்படி நியாயந்தீர்க்காமல் அதன் சித்தத்தின்படி நியாயந்தீர்க்கிறார். புது சித்தத்தின் மேல் மாம்சமானது ஜெயங்கொண்டு, அங்கு ஒரு விழுகை இருக்குமானால், புது சித்தம் ஒழிந்து விட்டது என்று பொருளல்ல, ஆனால் அது எச்சரிக்கையாக இருக்கவில்லை என்று பொருள்.

இப்படிப்பட்ட நிலையில் கர்த்தர் ஏற்ற காலத்தில் புது சித்தம் உயர்ந்த கனத்திற்கு தகுதியற்றது என்று தீர்ப்பு செய்வார். ஏனெனில் அது சரீரத்தை தனக்கு கீழ்க்கொண்டு வரவும் மாம்சீக ஆசைகளை பலியிடவும் தவறிவிட்டது. அல்லது ஒரு தவறான மார்க்கம் அங்கே நிலைத்திருந்து, புதிய சித்தம் பலவீனப்பட்டு, மாம்சம் அந்த அளவுக்கு பலம் அடைந்து புது சித்தம் படிப்படியாக மரிக்கும் நிலைக்கு வந்தது. கடைசியில் அது முடிவுக்கு வந்தது. அப்போஸ்தலர் யோவான் இது குறித்து பேசும் போது, "பொல்லாங்கன் அவனைத் தொடாதபடிக்கு" (1யோவான் 5:18) புது சிருஷ்டி தன்னை காத்துக்கொள்ள வேண்டும் என்று அறிவிக்கிறார். மேலும் தேவனுடைய வித்து அவனிடம் இருக்கும் வரை "தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான்" என்று அவர் கூறுகிறார். வேறு வார்த்தையில் சொல்லுவோமானால் சிந்தையானது, சித்தமானது தேவனுடைய சித்தத்திற்கு முற்றிலுமாக கீழ்ப்பட்டு இருந்தால், தேவனுடைய சித்தத்திற்கு எதிராக வேண்டுமென்றே, தெரிந்தே, உள்நோக்கத்தோடு செய்ய முடியாது. அதே சமயம் ஒரு மனிதனைப் போல வடக்கு மற்றும் தெற்காக போக முடியாது.

### அறிவு முதலானவகளின் குறைவினால் புது சுபாவம் சில காலம் செயலற்று இருக்கலாம்

பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள், ஆவிக்குரிய ஊட்டச்சத்து குறைவினாலும், அறிவு குறைவினாலும், புது சுபாவத்தை பலப்படுத்தவும் "மகா பரிசுத்த விசுவாசத்தில் உறுதிப்படுத்துகிறவைகளைப்" பற்றிய புரிதல் இல்லாததினாலும் வைராக்கியம் மற்றும் புதிய சித்தத்திற்கு கீழ்ப்படிவதிலிருந்தும் விழுந்து போகிற நிகழ்வுகள் உண்டு என்று நாங்கள் நம்புகிறோம். சில சமயம் இது அறியாமை, மூடநம்பிக்கை முதலானவைகளினால் வைராக்கியத்தை இழக்க காரணமாகிறது. புது சித்தம் மரித்து போனதினாலோ, மாம்சத்திற்கு முழுவதுமாக இடங்கொடுத்ததினாலோ அது நடக்கலாம் என்று தெரிகிறது. புது சித்தம் கீழ்ப்படிந்து பழைய சித்தத்திற்கு வழிவிடும் போது அதன் நடத்தை, ஆவிக்குரிய சத்து குறைபாட்டினால், கண்டிக்கத்தக்கதாக இருக்கும், இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய வார்த்தையை சரியாக புரிந்துகொண்டதினால்,

அதிக அறிவினால் மீண்டும் அடைந்தால், உயர்ந்த கிறிஸ்தவனாக ஆனாலும் புதிய சிந்தை கொஞ்ச காலத்துக்கு செயலற்று இருக்கும். இந்த நிலைமைக்கு எதிராக அப்போஸ்தலர் நம்மை எச்சரித்து கூறுகிறதாவது: "என் சரீரத்தை ஒடுக்கி கீழ்ப்படுத்துகிறேன்." " சபை கூடி வருகிறதை விட்டுவிடாதீர்கள்." "மகா பரிசுத்த விசுவாசத்தின் மேல் உங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்." (1 கொரிந்தியர் 9:27; எபிரேயர் 10:25; யூதா 20)

ஒருவர் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட பிறகு, பழைய பாவ வாழ்க்கையை தெரிந்து, விரும்பி தழுவினால் ஜெனிப்பிக்கப்பட்ட "வித்தானது" அழிந்து போகும். அவனைப் பற்றி அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "இரண்டு தரம் செத்து வேரற்று போன மரம்" என்றும் (யூதா 12) பாவங்களினிமித்தம் செலுத்துத்தக்க வேறொரு பலி இனியிராமல் இரண்டாம் மரணத்திற்கு செல்வான். (எபிரேயர் 10:26) ஒருவர் முதலில் தன்னை தேவனிடம் ஒப்புக்கொடுத்து, அவன் கிறிஸ்துவின் புண்ணியத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, புதிய சித்தம் தேவனுடையதாக அங்கீகரிக்கப்படும் போது அவன் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவனாகிறான். பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோயின; எல்லாம் புதிதாயின. அவனது சரீரம் புதிதானதல்ல; ஆனால் ஒரு புது சித்தத்தை, புது நோக்கத்தை பெற்றிருக்கிறான். பின்னர் அவன் கர்த்தருடைய ஊழியத்தை விட்டு, விரும்பி, தெரிந்தே உள்நோக்கத்தோடு பாவத்திற்கு ஊழியக்காரனானால் அவனது மார்க்கம் புதிய சித்தம் மரித்ததையும் பழைய சித்தம் ஜீவனுக்குள் வந்து உயர்த்தப்பட்டதையும் குறிக்கும்.

### புது சித்தம், புது சித்தமாகவே இருக்கும் போது பாவம் செய்யாது

இப்படியாக தேவ சித்தத்தை இழந்து, தானாக மனமுவந்து மாம்சீக சித்தத்தை மறுபடியும் ஏற்றுக்கொண்டால் புது சிருஷ்டியானது மரணத்துக்கேதுவான பாவத்தை பண்ணக்கூடும். எனினும் தேவனுடன் எப்பொழுதும் நல்லிணக்கத்துடன் இருக்கும். புது சிருஷ்டி பாவம் செய்யக்கூடும் என்று பொருளல்ல. சித்தம் பாவம் செய்தல் புது சிருஷ்டியாக இருப்பது நின்றுபோகும். ஒருவன் விரும்பியே தேவனை விட்டு விலகாதிருந்தால், அவன் மரணத்துக்கேதுவான பாவத்தை செய்யமாட்டான். இந்த விருப்பத்தின் "வித்தை" இழந்து, ஆவியானது தேவனை சந்தோஷப்படுத்தக்கூடிய காரியத்தைச் செய்தால், அதுவே ஜீவ நிலைமையிலிருந்து மரண நிலைமைக்கு செல்லக்கூடிய படியாக இருக்கிறது. நாம் புது ஜீவனை இன்னும் முழுமையாக பெறவில்லை. ஆனால் நாம் ஆவியை, நாம் சிந்தையை இழக்கக்கூடும். நாம் ஆவியை, சிந்தையை இழந்தால் நாம் அனைத்தையும் இழப்போம்.

கர்த்தர் நம்மை ஏற்றுக்கொண்ட நாம் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட ஒரு கணம் இருந்தது போல, இரண்டாம் மரணத்தின் போது, அது நிகழக்கூடிய ஒரு கணம் இருக்கும். அதே போல, கர்த்தருடைய சித்தத்தை அறிவதினால், நமது சரீரங்களை படிப்படியாக பலியாக ஒப்புக்கொடுக்கும் ஒரு குறித்த கணம் இருக்க வேண்டும். இது படிப்படியான ஒரு வேலையாக இருந்தது போல கர்த்தரிடமிருந்து பிரிதலும், பின்னடைவும் படிப்படியாக இருக்கும். திடீரென்று கர்த்தரை மறுதலிப்பது நடக்கக்கூடாததாக காணப்படுகிறது. அது வேதவாக்கியங்களுக்கு இசைவாகவும் காணப்படவில்லை. விசுவாச துரோகம் என்பது ஒரு பின்னடைவின் செயலாக ஜீவனுள்ள தேவனை விட்டும் அவருடனான உடன்படிக்கையிலிருந்தும் விலகுவதாக இருக்கிறது. இது முதலாவது நாம் கர்த்தருடன் செய்து கொண்டிருக்கிற பலியின் உடனபடிக்கையின் மூலம் செய்த ஏற்பாடுகளிலிருந்து படிப்படியாக விலகுவதாகும். அது தேவனை மீறுதலாக, தெரிந்து, வேண்டுமென்றே செய்த பாவமாக ஆகும்வரை அதிகமதிகமாக பெருகும்.

தடுக்கல் என்பது ஒரு விஷயம்; ஆனால் வேண்டுமென்றே செய்யும் பாவம் வேறொன்று. நீதிமான் அநேகந்தரம் தடுக்கி விழுந்தாலும் தானே எழும்புவான். ஆவிக்குரியவர்களாகிய நாம் அப்படிப்பட்டவைகளிலிருந்து மீறுவோம். நாமும் சோதிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். (கலாத்தியர் 6:1) எனினும் இந்த தடுக்கல் "மரணத்திற்கேதுவான பாவம்" அல்ல. வேத வாக்கியங்களின்படி இரண்டாம் மரணத்தை நாம் புரிந்து கொள்ளுவது என்னவென்றால், தனிப்பட்டவர் முழுமையாக விடப்படுதல், கர்த்தரால் முற்றிலுமாக கைவிடப்படுதல் நம்பிக்கையே இல்லாத அழிவு, அதிலிருந்து உயிர்த்தெழுதலே இல்லை என்பதாகும். ஆனால் தெரிந்தே, வேண்டுமென்றே கர்த்தரை விட்டுவிடுதல் இல்லாமல் இந்த நிலைமைக்கு போவதிலிருந்து தடுக்கவும் திருப்பிக்கொண்டு வரவும் தண்டனை பெறாமல் யாரும் இந்த நிலைமைக்கு வரமாட்டார்கள்.

### ஜெனிப்பித்தலுக்கு பிறகு குணலட்சண மறுரூபமடையும் வேலை ஆரம்பிக்கிறது

கர்த்தரிடத்தில் நமது ஜீவனை முழு அர்ப்பணம் செய்து, நமது கறைகளை மூட கிறிஸ்துவின் புண்ணியத்தை பெறும் பொழுதுதான் புது சிருஷ்டியாக நமது ஜெனிப்பித்தல் நடைபெறுகிறது. இந்த அர்ப்பணத்தை தேவன் ஏற்றுக்கொள்வது பரிசுத்த ஆவியை கொடுப்பதில் வெளிப்படுத்தப்படுகிறது. இது பரிசுத்தாவியினால் ஜெனிப்பிக்கப்படுதல் என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன. இந்த ஜெனிப்பித்தலைத் தொடர்ந்து மனதை புதுப்பிக்கிற வேலை நடைபெறுகிறது. "தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாக்கிறதினாலே மறுரூபமாகுங்கள்." (ரோமர் 12:2) இங்கே அப்போஸ்தலர் உலகத்திடமோ, பாவிகளிடமோ, சகோதரர்களைத் தவிர வேறு யாரிடமோ பேசவில்லை. இந்த சகோதரர்களின் சித்தங்கள் முன்னரே புதுப்பிக்கப்பட்டிருந்தாலும் ஒவ்வொரு எண்ணத்தையும் கிறிஸ்துவில் தேவனுடைய சித்தத்திற்கு இணக்கமாக கொண்டு வருகிற காரியம் இருக்கிறது. முதலாவது தேவனுடைய நல்லெண்ணம் என்ன, நாம் நீதி முதலானவைகளை பின்பற்றுவதில் அவருடைய சித்தம் என்ன என்பதை நாம் செயல்விளக்கம் அளிக்க வேண்டும். பிறகு அவருக்கு முழுமையாக பிரியமானது எது,

மூன்றாவதாக, அவரது பூரண சித்தம் என்ன என்பதாகும். (ரோமர் 12:1,2) பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களிடம் இது தொடர்ச்சியான அபிவிருத்தியாக இருக்க வேண்டும். இப்படியாக குறிப்பிட்ட அளவுக்கு கொண்டு வரப்பட்டவர்கள் மட்டுமே மணவாட்டி வகுப்பாராக, முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறுகிறவர்களாக இருப்பார்கள். “முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து அவரோடுகூட ஆயிரம் வருடம் அரசாளுவார்கள்.”

ஒருவருடைய நடத்தை இன்னொருவரை அவனுடைய ஒத்துழைப்பு இல்லாமல் இரண்டாம் மரணத்திற்கு கொண்டு செல்லும் என்று நாம் புரிந்து கொள்ளக்கூடாது. நம்மை தேவனிடமிருந்து பிரிக்க யாரும் குறுக்கிட முடியாது. “கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மை பிரிப்பவன் யார்?” என்று அப்போஸ்தலர் கேட்கிறார். (ரோமர் 8:35) ஆனால் நாம் பெற்றிருக்கிற செல்வாக்கை கொண்டு மற்றவர்களுக்கு உதவி பண்ணவோ அல்லது கெடுதி செய்யவோ கூடும். நாம் மற்றவர்களுக்கு உதவிகரமாக வாழ மட்டும் அல்ல கெடுதி உண்டாக்கும்படி வாழவும் நம்மால் முடியும். மற்றவர்கள் நமக்கு நித்திய ஜீவனை கொடுக்க முடியும் என்பற்காக உதாரணம் எதுவும் இல்லை. ஆனால் உதாரணமாக இருந்து மற்றவர்களுக்கு உதவி செய்ய முடியும். நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்துகூட தீமை உண்டாக்க முடியும்.

### நமது உதாரணம் மற்றவர்களை இரண்டாம் மரணத்திற்கு வழிநடத்துமா?

எந்த வகையில் ஒரு சகோதரனுடைய உதாரணம் மற்றவருக்கு தடுக்கலாக இருந்து இரண்டாம் மரணத்திற்கு கொண்டு செல்லக்கூடும் என்ற கேள்வி நமக்கு எழுகிறது. ஒருவர் இன்னொருவரை மனசாட்சியை மீறும்படி செய்யக்கூடுமானால் அவனை நீதியை விட்டு கீழான மார்க்கத்தில் செல்ல வைக்கக்கூடும். முதலில் அது சிறிய காரியத்தில் ஆரம்பித்து விரைவில் அது பாவத்திற்குள் வழிநடத்தும். நம்முடைய வார்த்தைகளும் கிரியைகளும் மற்றவர்களை தங்களது மனசாட்சியில் பலமும் மென்மையுமாக ஆக்கும்படி நாம் பாதுகாப்பாக இருக்க வேண்டும். முடிந்தவரை அவர்களை சரியான வழியில் நடத்த நாம் உதவிபுரிய வேண்டும்.

நமது சுதந்தரம் மற்றவர்களுக்கு தடுக்கலாக ஆவதைக் குறித்து அப்போஸ்தலர் பேசுகிறார். “அறிவுள்ளவனாகிய உன்னை விக்கிரகக் கோவிலிலே பந்தியிருக்க கண்டால், பலவீனமாயிருக்கிற அவனுடைய மனசாட்சி விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளைப் புசிப்பதற்கு துணிவு கொள்ளுமல்லவா?” (1கொரிந்தியர் 8:10) நாம் செய்ய முடிந்த நன்மையை அறியாமல் செய்யாமல் போனது மாத்திரமல்ல, அறியாமலேயே தீங்கும் செய்கிறோம். ஒரே நாவினாலே தேவனை துதிக்கவும் அதினாலே மனிதனை சபிக்கவும் செய்கிறோம். (யாக்கோபு 3:9) மற்றவர்களுக்கு உதவிகரமாகவும் பலப்படுத்துவதாகவும் இருக்கும்படியாகவும், அழிவும் தீமையும் ஏற்படாதவாறும் நாம் எப்படி ஜாக்கிரதையாக பேசவேண்டும்!

**R4831**

## JEHOVAH'S SUFFERING SERVANT
## யேகோவாவின் துன்புறும் தாசன்

ஏசாயா 52:13 - 53:1-12

“யேகோவா நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார்.” ஏசாயா 53:6

இறுதியில் மகிமையின் மாபெரும் மேசியாவாக இருக்கும்படி வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற ஒருவர் மேல் வரும் என்று தேவனால் முன் நியமிக்கப்படட அனுபவங்களின் தெய்வீக சித்திரமாக இந்த பாடம் இருக்கிறது. அவர் இஸ்ராயேல் ஜாதியை உயர்த்தி அதன் மூலம் பூமியின் வம்சங்கள் அனைத்தின் மேலும் ஆசீர்வாதங்களை ஊற்றுவார். “உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்” என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த பாடத்தின் அநேக தீர்க்கதரிசனங்கள் முன்னரே நிறைவேறியிருக்கின்றன. ஆனால் எல்லாம் அல்ல. மகிமையான காரியங்கள் இன்னும் வரவேண்டியிருக்கிறது. அது அருகில், இன்னும் வாசலருகே இருக்கிறது என்று நாம் நம்புகிறோம்.

இந்த தீர்க்கதரிசனங்கள் ஏறக்குறைய கி.மு. எழுநூறில் எழுதப்பட்டன. இயேசுவின் சொந்த அனுபவத்தில் அவைகள் விசேஷமாக நிறைவேறின. ஒரு சிறிய அளவான ஒரு “சிறுமந்தை” இயேசுவின் அடியார்கள் அவரது அடிச்சுவட்டில் இந்த யுகத்தின் பத்தொன்பது நூற்றாண்டுகளாக (இப்போமுது இருபது நூற்றாண்டு) நடந்திருக்கிறதை மறந்துவிடக்கூடாது. அவர்கள் அவரை நல்ல அறிக்கையோடும் தீமையான அறிக்கையோடும் பின்பற்றியிருக்கிறார்கள்; அவரோடு பாடுபட்டிருக்கிறார்கள்; அவரை நிந்தித்தவர்களின் நிந்தனை அவர்கள் மேல் விழுந்தது. மகிமையான நேரம், ராஜ்யத்தின் அதிகாரம் வரும்போது, அவரது நாமத்தில் பங்கு பெற்று அவரது மணவாட்டியாகவும், அவரது சிங்காசனத்திலும் மகிமையிலும் பங்குபெற்று அவர்களது இரட்சகருடன் இருப்பார்கள். “அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற யேகோவா என்பதே.” (எரேமியா 23:6; 33:16)

மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபகம் நீண்ட காலம் ஆவதற்கான புரிந்து கொள்ளுதலுக்கான சாவி, சபையானது அவரில் ஒரு பகுதியாக, அவரது சரீரத்தின் அங்கங்களாக இருக்கிறார்கள் என்கிற உண்மையில் இருக்கிறது. “தெரிந்து கொள்ளப்பட்ட” வகுப்பில் சிலரை இஸ்ரயேலரிலிருந்தும் மற்றவர்களை சகல கோத்திரங்களிலுமிருந்தும் மேசியாவின்

மணவாட்டியாகவும் அவரது ராஜ்யத்தின் பங்குதாரராகவும் கூட்டிச் சேர்ப்பது தெய்வீக நோக்கமாக இருக்கவில்லையா? அவரது மரணம் உறுதியளிக்கிற மகிமையான ஆசீர்வாதங்கள் ஊற்றப்படுவதற்கும் இயேசுவின் பாடுகளுக்கும் இடையே காலதாமதம் தேவைப்படாது.

தெரிந்துகொள்ளப்பட்ட சபையானது, பேர் சபையிலிருந்து அதன் முறைகளில் குறிப்பிட்டுள்ளது போல முற்றிலும் வேறானது என்பது மறுபடியும் நினைவு கூரப்படவேண்டும். உண்மையான தேவனுடைய சபையானது, கிறிஸ்துவத்தில் அனைத்து சபை பிரிவுகளிலும் இருக்கிற பரிசுத்தமான சிலரை மட்டுமே உள்ளடக்கியது. "பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்." (சங்கீதம் 50:5) இவர்களைக் குறித்து அப்போஸ்தலர் யோவான் எழுதியதாவது: "உலகம் அவரை அறியாதபடியினால் நம்மையும் அறியவில்லை." ஆனால் "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்" என்ற உறுதிமொழி வருகிறது. "கிறிஸ்துவின் பாடுகளின்" முடிவில் இந்த சிறுமந்தையின் தெரிந்துகொள்ளுதலும் குணலட்சணம் பூரணப்படுதலும் நிறைவடைந்து, உடனே மகிமை, மேசியாவின் ராஜ்யத்தின் மகிமை வரும்.

**தீர்க்கதரிசனத்தின் சுருக்கம்**

நமது தலைப்பு வசனத்தின் முதல் மூன்று வசனங்களில் மேசியாவின் முழு வேலையும், அதன் தயார்படுத்துதல் மாத்திரமல்ல, அதன் ராஜரீக வல்லமையின் வெளிப்பாடும் வைக்கப்பட்டிருக்கிறது. அது விசேஷமாக தலையானவருக்கு பொருந்துகிறதாக, ஆனால் அவரது சரீர அங்களுக்கும் பொருந்துகிறதாக இருக்கிறது. இதன் சரியான மொழிபெயர்ப்பு கீழ்வருமாறு:

"இதோ, என் தாசன் ஞானமாய் நடப்பார். அவர் உயர்த்தப்பட்டு மேன்மையும் மகா உன்னதமுமாயிருப்பார். மனுஷனைப் பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுப்புத்திரரைப் பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே, அவரைக் கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள். அப்படியே, அவர் அநேகம் ஜாதிகள் மேல் தெளிப்பார்; அவர் நிமித்தம் ராஜாக்கள் தங்கள் வாயை மூடுவார்கள்; ஏனெனில், தங்களுக்கு தெரிவிக்கப்படாதிருந்ததை அவர்கள் காண்பார்கள்; கேள்விப்படாதிருந்ததை அவர்கள் அறிந்து கொள்வார்கள்."

ஆயிரம் வருட அரசாட்சி திடீரென்று உலகத்தில் தோன்றும் பொழுது உலகின் பிரபுக்கள் ஏன் ஆச்சரியப்படுவார்கள் என்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட நியாயமற்ற, ஆதாரமற்ற அறிக்கைகளை தேவனுடைய ஜனங்களிடமிருந்து கூட அவர்கள் கேட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே வரும் போது ஆச்சரியத்தில் மூழ்கடிக்கப்படுவார்கள். மேசியாவின் ராஜ்யம் இருண்ட யுகம் காலப்பகுதியிலேயே ரோம சபையை வெற்றிகொண்டு நிறைவேறிவிட்டது என்று சிலர் அவர்களிடம் கூறியிருக்கிறார்கள். மற்றவர்கள் அவர்களின் மேசியாவின் ராஜ்யம் இப்பொழுது நடந்துகொண்டிருக்கிறது என்றும் பூமியின் பல்வேறு ராஜ்யங்களும் போர்களும் போர் ஆயத்தங்களும் மேசியாவின் ராஜ்யத்தின் பகுதிகள் என்றும கூறியிருக்கிறார்கள்.

இன்னும் மற்றவர்கள் ராஜ்யம் நீதியின் சீர்திருத்ததை கொண்டு வருகிற பரிணாம வளர்ச்சியின் காரியமாக இருக்கும் என்று கூறினார்கள். அது வரும் போது ஒரு பெரிய சமூக புரட்சி தொடரும். அது யாரும் எதிர்பார்த்ததைக் காட்டிலும் மகா கெம்பீரமானதாக இருப்பதால் அது அனைவரின் வாயையும் மூடும். கர்த்தர் தீர்க்கதரிசிகளின் மூலம் கூறியது போல, அந்த ராஜ்யம் "சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டதாக இருக்கும்." (ஆகாய் 2:6,7)

**அவர்களது சீஷர்களால் காணப்பட்டபடி**

இயேசுவின் நாளில் அவரது சீஷர்களின் நிலைப்பாட்டில் இருந்து அவர்கள் பார்த்த அவரது அனுபவங்களை ஏசாயா 53:1-6 சித்தரித்துக் காட்டுகிறது. மரணபரியந்தம் அவரது அன்பு மற்றும் பலியைக் குறித்த ஆச்சரியமானவைகளை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எவ்வளவு பேர் கேட்கிற சிந்தையுடன் கேட்டார்கள்; எவ்வளவு பேர் அதை உணர்ந்திருக்கிறார்கள். எவ்வளவு பேர் அவரை, ஆதாமையும் அவரது இனத்தாரையும் பாவம் மற்றும் மரணத்திலிந்து விடுவிக்கிற யேகோவாவின் நீட்டப்பட்ட புயம் என்று கண்டிருப்பார்கள்! சிலர் மட்டுமே, பரிசுத்தமான சிலர் மட்டுமே செய்தியை உண்மையாகவே, மெய்யாகவே நம்புகிறார்கள். ஏனெனில் உண்மையான ஒவ்வொரு விசுவாசியும் வழங்கப்பட்ட இரட்சகரின் புண்ணியத்தை மாத்திரம் ஏற்றுக்கொள்ளாமல், வரக்கூடிய மகிமையிலும் பங்கு பெறும்படியாக, அவர்களுக்கு வழங்கப்பட்ட அவரது பாடுகளையும் ஏற்றுக்கொள்வார்கள். நாம் வாசிக்கிறதாவது:

"எங்கள் மூலமாய் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது? இளங்கிளையைப் போலவும் வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப் போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை; சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும் போது நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது. அவர் அசட்டை பண்ணபட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடுகள் அனுபவித்தவருமாயிருந்தார்; அவரை விட்டு நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம்; அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற் போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்டைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப் போல் வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார்."

தெய்வீக ஆசீர்வாதம் வருவதற்கு முன்னர் பாவத்திற்கான ஒரு பலி தேவை என்பதை புரிந்து கொள்ளாமல், யுதர்கள் தங்களை ரோமர்களின் நுகத்திலிருந்து விடுவிக்க ஒரு வல்லமையுள்ள நாயகனை, வெற்றிக்கொள்ளும் தளபதியை எதிர்நோக்கினார்கள். இயேசு கனிவான போதகராக, மனதுருக்கமும், சாந்தமும் உடையவராக இருந்து தன் ஜீவனை "ஆடுகளுக்காக" கொடுத்தது அவர்களுக்கு ஏமாற்றத்தை கொடுத்தது. அவர் உண்மையிலேயே பரிசுத்தமும் தேவ பக்தியுமான ஆசீர்வாதங்களை பெற்றிருந்தார். ஆனால் இவை அவர்கள் எதிர்பார்த்த நம்பிக்கையும் கனவும் அல்ல. இயேசுவினால் சகித்துக்கொள்ளப்பட்ட அனுபவங்கள் எல்லாம் மற்றவர்களால் தவறாக புரிந்து கொள்ளப்பட்டன. அவரது சீஷர்கள் கூட தவறாக புரிந்துகொண்டனர். அவர்களில் ஒருவர் கூறியதாவது: "இது உமக்கு நேரிடக்கூடாது, இது உமக்கு சம்பவிப்பதில்லை." அவரது சிலுவை மரணம்; அவர் சிலுவையில் அறையப்படும் போது, அது தெய்வீக அங்கீகாரமின்மைக்கு ஆதாரமாக அநேகரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தமது தாசனையும் அவரது ஊழியத்தையும் யேகோவா நிராகரித்ததற்கான ரூபகாரம் என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### மிகவும் முதிர்ச்சியடைந்த பார்வை

வசனம் ஏழு முதல் ஒன்பது வரை இயேசுவின் சீஷர்களின் முதிர்ச்சியடைந்த பார்வையை சித்தரிக்கின்றன. அவர்கள் தங்கள் ஆண்டவரையும் அவரது வேலையையும் மிகவும் ஜாக்கிரதையாக புரிந்து கொள்ளவும் கவனிக்கவும் ஆரம்பித்தார்கள். தலையானவருக்கு இருந்தது போலவே, சபையும் அவரது சரீரமாகவும் இருந்த அநேக அங்கங்களுக்கும் இருந்தது. அவர்களது மரணத்திற்கு பிறகு தான் தெய்வீக நிலைப்பாட்டில் அவர்களது உண்மையான ஆவி புரிந்து கொள்ளப்பட்டு, உணர்ந்து கொள்ளப்பட்டது.

நாம் வாசிக்கிறதாவது: "அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார்; ஆனாலும் தம்முடைய வாயை திறக்கவில்லை; அடிக்கும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும் தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலிருந்து அவர் எடுக்கப்பட்டார்; அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும்; ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார்; என் ஜனத்தின் மீறுதல்களினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார். துன்மார்க்கரோடே அவரது பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்த போது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை ; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை."

குழந்தையில்லாமல், ஒரு குற்றவாளியைப் போல, இயேசு மரிப்பது போல மரிக்கிறவர் மகா மேசியாவாக ஆகும்படி எதிர்பார்க்க முடியுமா? அவரைப் பற்றி எழுதப்பட்டிருப்பதாவது: "அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு எனப்படும்." சிலுவையிலறையப்பட்ட இயேசு எப்படி ஒருவனுக்கு ஜீவனைக் கொடுக்க முடியும்?

ஆதாமின் விழுகையினால் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்ட ஆதாமையும் அவரது இனத்தையும் அவர் விலைகொடுத்து வாங்கிய தெய்வீக ஏற்பாட்டை வேத வாக்கியங்கள் விளக்குகின்றன. பரம பிதாவாகிய யேகோவாவினால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்ட இயேசு இப்பொழுது மகிமையடைந்து அவரது சரீரமாகிய சபையானது நிறைவடைய காத்திருக்கிறார். இஸ்ரயேல் மற்றும் உலகத்தின் மேசியாவாக அவரது மகா அதிகாரத்தையும் ஆளுகையையும் எடுத்துக்கொள்ளுவார். மேசியாவின் ஆளுகையில் ஆதாமுக்கும் அவரது சந்ததியினருக்கும் உயிர்த்தெழ அல்லது பாவத்திலுமிருந்தும் மரண நிலைமையிலிருந்தும் எழுப்பப்படவும் முழுமையான மானிட பூரணத்திற்கும் நித்திய ஜீவனுக்கும் சந்தர்ப்பம் கொடுக்கப்படும். ஆதாமில் இழந்த அனைத்தும் சிலுவை மூலம் மீட்கப்படும். பின்வருகிற வசனத்தில் இது விளக்கப்படுகிறது: "அவர் தம் சந்ததியை காண்பார்." அநேக ஆதாமின் சந்ததியினர் அவருக்கு கீழ்ப்படிந்து, அவர் அவர்களை பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டு, மானிட பூரணத்தில் அவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்.

### தீர்க்கதரிசன விளக்கம்

வசனம் பத்து மற்றும் பதினொன்று, இயேசுவின் அனுபவங்களின் தீர்க்கதரிசன விளக்கத்தை கீழ்க்கண்டவாறு தருகிறது; "யேகோவா அவரை நொறுக்க சித்தமாகி, அவரைப் பாடுகளுக்கு உட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னை குற்ற நிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கும் போது அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்த நாளாயிருப்பார்; கர்த்தருக்கு சித்தமானது அவர் கையினால் வாய்க்கும். அவர் தம் ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களை தாமே சுமந்துகொள்வார்."

### இரட்சகரின் உயர்த்தப்படுதல்

நமது பாடத்தின் கடைசிவசனம், இயேசு உயிர்த்தெழுதலில் தேவதூதர்கள், துரைத்தனங்கள், வல்லமைகள் மற்றும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாக உயர்த்தப்படுதலை குறிக்கிறது. இது அவரது பலியின் உடன்படிக்கையின்படி, பிதாவின் சித்தத்தை செய்வதில் அவரது உண்மைத் தன்மைக்கான பரிசாக இருந்தது. இயேசு இந்த பெரிய பரிசை, "பலமான ஜெயங்கொண்டவர்களாகிய" தமது சபை, தமது மணவாட்டியுடன் பகிர்ந்து கொள்ளுவார் என்று யேகோவாவும் நமக்கு சொல்லுகிறார். கடைசியாக தீர்க்கதரிசி ஆண்டவரின் தற்கால யுகத்தின் வேலையை சுருக்கமாக கூறுகிறார்.

"அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தை தாமே சுமந்த அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டனிமித்தம் அநேகரை அவருக்கு பங்காக கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்கு கொள்ளையாக பங்கிட்டுக் கொள்வார்."

R4832

# RANSOM - RANSOM-PRICE - SIN ATONEMENT
# மீட்கும் பொருள் – மீட்கும் பொருளின் விலைக்கிரயம் – பாவநிவாரணம்

நமது பரம பிதா, நமது கர்த்தராகிய இயசே கிறிஸ்துவின், அவரது குமாரனின் மரணத்தில் ஒரு மீட்கும் பொருளின் விலைக்கிரயத்தை ஏற்பாடு செய்தார். அந்த மீட்கும் பொருளின் விலைக்கிரயம் அகில உலகத்தில் பாவங்களுக்காக ஆகும். ஆனால் பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு கொடுக்கப்பட்ட அந்த மீட்கும் பொருளின் விலைக்கிரயத்தின் நன்மையின் பங்கை உலகமானது இன்னும் பெறவில்லை. ஏனெனில் அது இன்னும் "பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது." (1 யோவான் 5:19) இந்த காரியத்தைக் குறித்த நமது பிதாவின் சித்தத்தை அறிந்த நமது கர்த்தர் அறிவித்ததாவது: "நான் உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்கு தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்கிறேன்." (யோவான் 17:9)

சபைக்கு மீட்கும் பொருளின் பிரயோகம், நமது கர்த்தராகிய இயேசு, "உன்னதத்துக்கு ஏறி நமக்காக தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்த பொழுது பிரயோகிக்கப்பட்டது." (எபிரேயர் 9:24) பெந்தேகொஸ்தே ஆசீர்வாதத்தின் மூலமாக அவரது புண்ணியம் நமக்கு சாட்டுதல் பண்ணப்பட்டது. நமது இரட்சகருடன் உடன் சுதந்தரராகும்படி புது சிருஷ்டியாக ஜெனிப்பிக்கப்பட்ட "நம்" வகுப்பார் அனைவருக்கும் இந்த சாட்டுதல் தொடர்கிறது.

நமது மாபெரும் பிரதான ஆசாரியர் தமது மீட்கும் பொருளின் புண்ணியத்தை சபையின் சார்பாக கொடுத்து தீரும்வரை உலகத்தின் சார்பாக கொடுக்கமாட்டார். இப்பொழுது சபையார் "தங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க" பிதாவானவரால் இழுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். (ரோமர் 12:1)

ஆகையால் இந்த யுகத்தில் சபையின் பலியை தமது சொந்த பலியின் ஒரு பாகமாக ஏற்றுக்கொள்கிறார். "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்தில் நிறைவேற்றுகிறேன்" என்று அப்போஸ்தலர் கூறுவது போல இந்த வகுப்பாருக்கு இது சாத்தியமாகிறது. (கொலோசேயர் 1:24) இப்படியாக தற்காலத்தில் அவருடன் பாடுபட்டு விரைவில் அவரோடு கூட அவரது மணவாட்டியாக மகிமைப்படுத்தப்படுவார்கள்.

தொகுத்துக் கூறும் போது: மீட்கும் பொருளின் விலைக்கிரயம் என்பது ஒன்று, அந்த மீட்கும் பொருளின் விலைக்கிரயத்துடன் பாவ நிவாரணம் செய்யப்பட்டது என்பது வேறொன்று. மீட்கும் பொருளின் விலைக்கிரயம் நமது கர்த்தரால் கல்வாரியில் அவர் முடித்த வேலையின் மூலம் நம் அனைவருக்கும் கொடுக்கப்பட்டது. மீட்கும் பொருளின் விலைக்கிரயம் இரண்டு மடிப்புடையது:

1. இந்த யுகத்தில் சபையின் சார்பாக
2. வருகிற யுகத்தில், புதிய உடன்படிக்கை இஸ்ரயேலருடன் முத்திரை போடுவதற்கு; அது பூமியின் சகல கோத்திரத்தாரும் ஏற்றுக்கொள்ளுவதற்கு திறந்து விடப்படும்.

தேவனை பொருத்தவரை நிவாரணம் கல்வாரியில் கொடுக்கப்பட்ட மீட்கும் பொருளின் விலைக்கிரயத்திலிருந்தும் சகலமும் தொடர்கிறது. அந்த விலைக்கிரயத்தின் முதலாவது பிரயோகம், நமது கர்த்தர் பரலோகத்துக்கு எழுந்தருளி நமக்காக தேவனுடைய சமூகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்த போது சபைக்காக செய்யப்பட்டது. மீட்கும் பொருளின் விலைக்கிரயத்தின் இரண்டாம் பிரயோகம் மகா ஆசாரியராக இந்த யுகத்தின் முடிவில் புதிய உடன்படிக்கையை யூதா குடும்பத்தோடும் இஸ்ரயேல் குடும்பத்தோடும் மத்தியஸ்தம் பண்ணும் போதும் நடக்கும். இந்த உடன்படிக்கையானது, சபை அபிவிருத்தி பண்ணப்படுகிற மத்தியஸ்தர் இல்லாத ஆபிரகாமின் உடன்படிக்கை மற்றும் பலியின் உடன்படிக்கையிலிருந்து மாறுபட்டது. ஆனால் புதுஉடன்படிக்கை என்பது, மனிதன் தனது பூர்வ நிலைமையின் பூரணத்திற்கு திரும்புவதற்காக திரும்ப பெறுதலின் ஒரு உடன்படிக்கை.

---

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ.C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்
வெளியிடுபவர் :
சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,
எண். 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை - 600 019.
கைபேசி : 97909 00030. மின்னஞ்சல் : mbsaselvaraj@gmail.com
Website : www.thestudiesinthescriptures. com
**FOR PRIVATE CIRCULATION ONLY**